ISSN: 2012 - 6352

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய - சமூக - இலக்கிய வெளியீடு




பெப்ரவரி - 2014

40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

**பெப்ரவரி – 2014**


மலர் - 46 இதழ் - 01

• **ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

• **இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

• **துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

• **ஆலோசகர்**
A.G.இராஜேந்திரம்

• **கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்

• **வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

• **முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

• **பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு .................. 01
எண்ணிப் பார்க்கையில் ................ 02
ஐ.நா.வின் அகில உலக ................ 03
அன்புமணி என்னும் இலக்கிய .... 05
இலக்கிய மஞ்சரி ............................ 06
புனிதர்களை அறிவோம் ............... 07
மாணவர் பக்கம் ............................ 09
நீங்கள் எப்படி ................................ 10
படலை மாமி .................................. 12
சராசரி மனிதன் .............................. 14
காணிக்கைத் தாய் ......................... 15
தொண்டனின் சில நிமிடங்கள் .... 16
வெரித்தாஸ் தமிழ்ப்பணி .............. 18
தீர்க்க தரிசனங்களின் .................... 19
வீட்டு மருத்துவம் ........................... 23
தமிழில் கிறிஸ்தவ இலக்கி .......... 24
கௌதமர் செய்த தவறு ................ 26
விவிலியம் கற்போம் ...................... 27
அறிவை வளர்ப்போம் .................... 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு...

உலக வரலாற்றில் மன்னராட்சி, சர்வாதிகார ஆட்சி, மக்களாட்சி என்று பல்வேறு விதமான ஆட்சிகள் காணப்பட்டன. இப்பல்வேறு ஆட்சி முறைகளில் மக்களாட்சி முறையே சிறந்ததாகக் காணப்படுகின்றது. இங்கிலாந்தின் முன்னால் பிரதமர் 'வின்சன்ட் சர்ச்சில்':

"மானுடம் கண்டுள்ள ஆட்சி முறைகளில் ஜனநாயக ஆட்சி முறையே குறைந்த தீமைகளைக் கொண்டுள்ளது" என்கிறார்.

இன்று ஒவ்வொரு மனிதனும் தன் விருப்பப்படி சுதந்திரமாக வாழ ஆசைப்படுகின்றான். ஒரு திரைப்படப் பாடல் இவ்வாறு சொல்கின்றது,

"யாரும் இல்லாத தீவொன்று வேண்டும், அதில் என்னோடு நீ மட்டும் வேண்டும்" என்று. "சின்னச் சின்ன ஆசை, சிறகடிக்க ஆசை...." என்ற வரிகள் தனி மனித சுதந்திரத்தைப் பற்றி சித்தரித்துக் கூறுகிறது.

'கலில் ஜிப்ரான்' என்பவர் கூறுகின்றார்:

"துன்பமற்ற பகலும் இன்பமுள்ள இரவுமே உங்கள் உண்மையான விடுதலை" என்று.

இங்கு மனிதன் பல்வேறு நிலைகளிலிருந்து சுதந்திரக் காற்றை சுவாசிக்க நினைக்கின்றான். போர்ச் சூழலிலிருந்து, அடிமை வாழ்விலிருந்து, சமூகப் பிரச்சினை, குடும்பப் பிரச்சினை என்று பலதரப்பட்ட நிலைகளிலிருந்தும் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் அவன் முற்படுகின்றான்.

ஆனால், இன்று ஆட்சியாளர்களின் சூழ்ச்சிகளால் அவனது சுதந்திரக் காற்று வெறுமனே செல்லாக் காசாகி விட்டது. (நீ.மொழி 1:7) "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம்", "ஆண்டவருக்கு அஞ்சுபவன், அவர் காட்டிய வழியில் நடப்பவன்" இவை தனி மனிதருக்கு மட்டுமன்று மாறாக, அரச அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் அனைத்திற்கும் பொருந்தும். ஆட்சியிலிருப்போர் தங்களது அதிகாரம் கடவுளிடமிருந்து வருகிறது, தாங்கள் கடவுளுக்கும் அவரின் பிள்ளைகளுக்கும் கடமைப்பட்டவர்கள் என்பதை உணர வேண்டும்.

இன்று நாட்டிலே கையூட்டு, களவு, பொய்மை, கொலை, கொள்ளை, மனித உரிமை மீறல்கள் என தலைவிரித்தாடுகின்றதெனில் அதற்குக் காரணம் தலைவர்களும் மக்களும் "தெய்வ பயம்" இல்லாது வாழ்வதுதான் உண்மையாக இருக்க முடியும். ஆகவே, தலைவர்கள் உண்மைத் தலைவர்களாக, மக்களுக்குப் பணிபுரிபவர்களாக வாழ வேண்டும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற தாயுமானவரின் கூற்றினை நம் வாழ்வில் விருது வாக்காக்குவோம்.

"என் வார்த்தையில் நிலைத்திருப்பீர்களாகில் உண்மையாகவே என் சீடராய் இருப்பீர்கள். உண்மையை அறிவீர்கள். அவ்வுண்மையே உங்களுக்கு விடுதலையளிக்கும்". பிறரை அன்பு செய்வதில்தான் உண்மையான விடுதலை கிடைக்கும். இந்த விடுதலையை அளிப்பவர் இறைவன் ஒருவரே! ஆதலினால், உண்மைச் சுதந்திரத்திற்காக இறைவனிடம் மன்றாடுவோம்; வேற்றுமை, வேறுபாடுகளை அகற்றி ஒற்றுமை ஒருமைப்பாட்டினை வளர்க்கும் சமுதாயத்தை உருவாக்குவோம்.

"பூமியில் எவருக்குமினி அடிமை செய்யோம்,
பரிபூரணுக்கே அடிமை செய்து வாழ்வோம்"

- பாரதியார் -

- ஆசிரியர் -

## இறைவார்த்தை

"எல்லா மனிதரும் மீட்புப் பெறவும் உண்மையை அறிந்துணரவும் வேண்டுமென அவர் விரும்புகிறார்"

(1 திமொ 2:4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உலக அமைதி தினச் செய்தி

சகோதரத்துவம் இன்றி, ஒரு நீதியான சமூகத்தையும், உறுதியான மற்றும் நிலைத்த அமைதியையும் கட்டியெழுப்ப இயலாது என்பதால், சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புவதில் குடும்ப உறுப்பினர்களின் பொறுப்புணர்வை வலியுறுத்தி 2014ம் ஆண்டின் சனவரி முதல் நாளன்று கொண்டாடப்படும் உலக அமைதி தினத்திற்கான தன் செய்தியைத் துவக்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

'சகோதரத்துவம், அமைதிக்கு அடித்தளமும் வழியும்' என்ற தலைப்பில் இவ்வியாழனன்று உலக அமைதி தினச் செய்தியை வெளியிட்டுள்ள திருத்தந்தை, உலகின் பல பகுதிகளில், அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிராக, குறிப்பாக, வாழ்வுரிமை மற்றும் மதச் சுதந்திர உரிமைக்கு எதிராக நிகழும் கடும் குற்றங்கள், மனித வியாபாரம், ஆயுதச் சண்டைகளுக்கு இணையான பொருளாதார மற்றும் நிதித் துறைகளில் இடம்பெறும் சண்டைகள், ஏற்றத்தாழ்வுகள், வறுமை, அநீதியின் பல வடிவங்கள் போன்றவை சகோதரத்துவம் பெரும்பாலும் இல்லை என்பதையும், ஒரு தோழமைக் கலாசாரம் உலகில் இல்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றன என்று அதில் கூறியுள்ளார்.

மட்டுமீறிய தனியுரிமைக் கோட்பாடு, தன்னையே மையப்படுத்தும் நான் எனும் முனைப்பு, பொருளாதார நுகர்வு ஆகியவற்றை ஆதரிக்கும் புதிய கருத்துருவாக்கங்கள், சமூகப் பிணைப்புகளைப் பலவீனப்படுத்துகின்றன எனக் கவலை தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சகோதரத்துவத்துக்கு நாம் இயல்பாகவே அழைக்கப்பட்டிருந்தாலும் அந்த அழைப்பை மறுதலிக்கும் தீய சக்தியும் நம்மில் உள்ளது என்பதை பழைய ஏற்பாட்டின் காயின், ஆபேல் கதை நமக்கு உணர்த்துகிறது எனக் கூறும் திருத்தந்தை, மனித சகோதரத்துவம் சிறப்பான முறையில், இயேசுக் கிறிஸ்துவில், இயேசுக் கிறிஸ்துவால் அவரது மரணம் மற்றும் உயிர்ப்பு வழியாகப் புத்துயிரளிக்கப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். சகோதரத்துவம், ஏழ்மையை ஒழிப்பதற்கு ஒரு முன்நிபந்தனை, பொருளாதாரத்தில் சகோதரத்துவத்தை மீண்டும் கண்டுணர்தல் போரைத் துடைத்தழிக்கின்றது, ஊழலும் திட்டமிட்ட குற்றமும் சகோதரத்துவத்துக்கு அச்சுறுத்தலாக உள்ளன, சகோதரத்துவம் இயற்கையைப் பேணிப் பாதுகாக்க உதவுகின்றது என்ற தலைப்புகளிலும் அமைதிக்கு சகோதரத்துவத்தின் தேவை குறித்து தன் அமைதி தினச் செய்தியில் விளக்கியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.



## எண்ணிப்பார்க்கையில்.... 2

அன்டாஜ. ஜீ. இராஜஜீத்ம்

வாழ்வில் வெற்றிகாணவேண்டும் என்பதுதான்
மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்குள்ளும்
வாழுகின்ற வேணவா!
ஆனாலும்,
எல்லோரும் வாழ்வில் வெற்றி கண்டுவிடுவதில்லை.
பலர் வெற்றிகண்டாலும் சிலர் அந்த வெற்றியுடன்
நிலைப்பதில்லை!!
வெற்றி பெறும் அதிர்ஷ்டத்தைக் கொண்டிருந்தால்
மட்டும் போதாது;
தொடர்ந்தும் வெற்றி பெறும் அதிர்ஷ்டத்தைக்
கொண்டிருக்கவேண்டும் என்பார்கள்.
வெற்றி மீது வெற்றி வந்து சேரவேண்டும்
என்று விரும்புகின்றவர்கள்
அந்த வெற்றி நோக்கிப் பயணிக்கும் துணிவும்,
உறுதியும் உள்ளவர்களாக இருக்கவேண்டும்!
அப்போதுதான் வெற்றியும் அவன் மீது
ஆசை கொள்ளுகிறது.
வெற்றி என்பது எழுந்தமானமாக
எல்லோரையும் வந்துசேர்வதில்லை
இன்றோ நாளையோ யார் என்னால் முடியும்
என்று நினைக்கின்றானோ
அவனே வெற்றியாளனாகின்றான்.
எண்ணிப் பார்க்கையில்....
அதிகமானோரிடம் வெல்லுகின்ற உறுதி இருக்கும்;
ஒரு சிலரிடம் வெற்றிக்கு ஆயத்தப்படுத்தும்
உறதி இருக்கும்
நம்மிடம் என்ன இருக்கிறது?
ஆசை மட்டும் போதாது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஐ.நா வின் அகில உலக மனித உரிமைப் பிரகடனம்

கடந்த இதழ்த் தொடர்ச்சி....

- தாங்கவியலாக் கொடூர சூழலிலிருந்து தப்பித்து, பிற நாடுகளில் தஞ்சம் கோரிப் பெறுவதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஐ.நா. வரையறுத்த நோக்கங்களுக்கும் கொள்கைகளுக்கும் புறம்பாகவோ, அரசியல் சாரா குற்றங்கள் புரிந்ததற்காகவோ அகதியாகத் தஞ்சம் கோரிப் பெறும் உரிமை கிடையாது. தேசிய இனவுரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

- மணம் புரிந்து கொள்வதற்கும் குடும்பம் அமைத்துக் கொள்வதற்குமான உரிமை உரிய வயதடைந்த அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் உண்டு. மணமக்களின் முழுமையான சுய இசைவோடுதான் திருமண உறவு ஏற்படுத்த வேண்டும். குடும்பம் சமுதாயத்தின் இயற்கையான அடிப்படை அலகு ஆகும். சமுதாயத்திடமிருந்தும், அரசிடமிருந்தும் பாதுகாப்புப் பெறும் உரிமை குடும்பத்திற்கு உண்டு.

- தனித்துவம், பிறரோடு சேர்ந்து சொத்து வைத்துக்கொள்வதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

- சிந்தனை, மனச்சாட்சி மற்றும் சமய சுதந்திரத்திற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

- கருத்துரிமை, எண்ணங்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் அனைவருக்கும் உண்டு.

- அமைதியான முறையில் கூட்டம் கூடவும் சங்கமாகச் சேருவதற்குமான சுதந்திர உரிமை அனைவருக்கும் உண்டு.

- நேரிடையாகவோ, சுதந்திரமான முறையில் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் மூலமாகவோ, தமது நாட்டின் அரசாட்சியில் பங்கேற்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. தன் நாட்டின் அரசுப் பணியில் சமவாய்ப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. மக்களின் விருப்பமே அரசதிகாரத்தின் அடிப்படையாய் அமைதல் வேண்டும்.

- சமுதாயத்தின் உறுப்பினர் என்ற முறையில் ஒவ்வொருவருக்கும் சமூகப் பாதுகாப்பிற்கான உரிமை உண்டு.

- வேலைக்கான உரிமையும், தான் விரும்பும் வேலையைத் தேர்வு செய்துகொள்ளும் உரிமையும், நியாயமான, சாதகமான பணிச்சூழலுக்கான உரிமையும் வேலையின்மைக்கு எதிராக பாதுகாப்புப் பெறும் உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு. சம வேலைக்கு சம ஊதியம் பெறும் உரிமை எவ்விதப் பாகுபாடுமின்றி ஒவ்வொரு நபருக்கும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

- ஓய்வுக்கும் இளைப்பாறலுக்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. வேலை நேரத்திற்கு நியாயமான முறையில் வரம்பிட வேண்டும் என்பதும் ஊதியத்தோடு கூடிய விடுமுறை வழங்கவேண்டும் என்பதும் இவ்வுரிமையில் அடங்கும். குடும்பத்தினர் ஆரோக்கியத்தையும் நல் வாழ்வையும் பேணும் வகையில் உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி, அவசியமான சமூகப் பணிகள் ஆகியவற்றுக்கான உரிமையும், வேலையின்மை, நோய், இயலாமை, விதவை நிலை, முதுமை, வாழ்வதற்கான வசதியின்மை போன்ற நிலைகளில் சமூகப் பாதுகாப்பைப் பெறுவதற்கான உரிமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

- கல்வி பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆரம்ப மற்றும் அடிப்படை நிலைகளிலாவது கல்வி இலவசமாக இருக்க வேண்டும். ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும். தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறைக் கல்வியை பரவலாக்குவதோடு உயர் கல்வியை அனைவருக்கும் தகுதி அடிப்படையில் சமவாய்ப்புக்குரியதாக்க வேண்டும். குழந்தைகளுக்கு வழங்கப்படும் கல்வியைத் தேர்வு செய்யும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

- தடையின்றிச் சமுதாயத்தின் கலாசார வாழ்க்கையில் பங்கேற்பதற்கும் கலைகளைத் துய்ப்பதற்கும், அறிவியல் முன்னேற்றத்திற்கும் அதனால் விளையும் நன்மைகளிலும் பங்குபெறுவதற்குமான உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஒரு மனிதன் தன் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுகின்ற போதுதான் அவன் சுதந்திரமான ஆளுமையைப் பெற்ற, முழுவளர்ச்சி அடைந்த மனிதனாக மாறமுடியும்.

இப்பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை, சுதந்திரங்களைப் பாதிக்கும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபட ஒரு குழுவிற்கோ, அரசுக்கோ அல்லது தனிநபருக்கோ உரிமையுண்டு என்று எவரும் பொருள் கொள்ளக் கூடாது.

■ - தொல் பிரிட்டோ -

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் உரைகளிலிருந்து....

- ■ நம் ஆண்டவரின் ஆறுதலுக்கு நாம் ஒருபோதும் அஞ்சக்கூடாது. மாறாக, கடவுளின் கனிவை நாம் உணரச் செய்யும் அந்த ஆறுதலை நாம் தேடவேண்டும், கேட்க வேண்டும்.

- ■ உதவி தேவைப்படுவோரைக் காணும்போது நாம் நிற்பதுண்டா...? இன்றைய உலகில் எண்ணிலடங்காத் துன்பங்களும் ஏழ்மையும் உள்ளன. அதிக எண்ணிக்கையில் நல்ல சமாரியர்களும் தேவைப்படுகிறார்கள்.



- ■ நாம் இயேசுவில் வேரூன்றியிருந்தால் எத்தகைய தாக்குதலையும் நம்மால் எதிர்கொள்ளமுடியும்.

- ■ நாம் இயேசுவுடன் நண்பர்களாக இருப்பதற்கு அழைக்கப்பட்டுள்ளோம். ஆண்டவரால் அன்புகூரப்பட உங்களைக் கையளிப்பதற்கு அஞ்சவேண்டாம்.

கதிரவன் எழுந்ததுபோல் வந்தான்
கறுப்பினத் தலைவனாய் வென்றான்
சதிராடுந் தலைவர்க்குச் சாத்திரமா மவன்வாழ்வு
விதிவந்து விழ்ந்தாலும் நின்றான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 'அன்புமணி' யென்னும் இலக்கிய தவசி



ஈழத்து இலக்கியத் தோப்பிலிருந்து 'அன்புமணி' என்கிற ஆலவிருட்சம் சாய்ந்து விட்டது. இந்த மண்ணை, மண்ணின் இலக்கியத்தை, இலக்கிய காரர்களை இறுதிவரை நேசித்து மதித்து வாழ்ந்த அந்தக் கடைசி மனிதரும் நம்மை விட்டுப் பிரிந்துபோனார். 'மாபெரும் இழப்பு' என்பதன் தொனி எனக்கிப்போதுதான் புரிகிறது.

சாதாரண மனிதனையும் அவன் உணர்வுகளையும் மதித்த அரச உயர் அதிகாரியாய், உன்னத வாசகனாய், எழுத்தின் உபாசகனாய் வாழ்ந்த அந்தப் 'பன்முகன்' இனி நமக்கில்லையென்பதே ஒரு பெருந்துயர்தான். அவர் வாழ்ந்த காலத்தில் அவரைச் சந்தித்த எவருமே அவரைப் பிரிய மனதின்றிப் பிரிந்ததுதானுண்மை.

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே - நலமிக்க நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே' என்கிற மூதுரை இவருக்காகத்தான் எழுதப்பட்டதோ என்னவோ!

நல்ல இலக்கியங்கள் அவரிடமிருந்து தப்பித்ததாய்ச் சரித்திரமில்லை. ஓர் எழுத்தாளன் இன்னோர் எழுத்தாளனின் ஆக்கத்தை விதந்துரைத்தவொரு சரித்திரம் ஈழத்தில் நிகழ்ந்திருந்த தென்றால், அது 'அன்புமணி' யென்னும் மாமனிதருடன் முற்றுப்பெற்ற கதை. 1996ம் ஆண்டு 'காத்திருப்பேன்' கவிதைக்காக எனக்கும் முதல் தேசிய விருது கிடைத்த செய்தி அன்புமணியவர்களின் தபாலட்டை மூலந்தான் முதலில் தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து அன்றைய அரச அதிபர் A.K. பத்மநாதனின் வாழ்த்துச் செய்தியும் அதன் பின்னணியில் அன்புமணியவர்களே செயற்பட்டா ரென்பதும் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தன. ஏனெனில் அந்தக் காலகட்டத்தில் நானவருக்கு அத்தனை அறிமுகமல்லாத ஒருவன். அந்த எனது வித்தியாசமான கவிதை மீது இறுதிவரையவர் கொண்டிருந்த காதலும் நம்பிக்கையும் என்னால் வர்ணிக்கமுடியாதவை.

1953ல் கல்கியில் வெளிவந்த 'கிராமபோன் காதல்' என்கிற சிறுகதையோடு தொடங்கிய அவரது இலக்கிய வாழ்வு 2013ம் ஆண்டு வரையிலான அறுபது வருட முற்றிய அனுபவத்துடன் முற்றுப் பெற்ற போது அவரொரு முழுமையான தபசியாகவே மாறியிருந்தார்.

ஈழத்துப் பத்திரிகை, சஞ்சிகை என்றில்லாது தென்னிந்தியப் பத்திரிகை, சஞ்சிகைகளிலும் பதிவாகியிருந்த அவரது எழுத்தில் சமூக விமர்சனம் மேலோங்கியிருக்கும். கதைக்களத்தைப் படம் பிடித்துக் காட்டும் அவரது வர்ணனைகள் தத்ரூபமானவை. உரையாடல் என்பது அவரது எழுத்தில் ஆதிக்கஞ் செலுத்தாதவொன்று.

உயர்ந்த உள்ளத்திலிருந்துதான் உயர்ந்த எழுத்து உருவாக முடியும். அதற்கு ஆழ்ந்த சிந்தனையும், முதிர்ந்த அனுபவமும் தேவை. வாசகர் விரும்புவதையே இலக்கிய கர்த்தா கொடுக்க வேண்டும் என்பது அவரது வாதம்.

1970ல் 'மலர்' என்கிற தரமான சஞ்சிகையின் ஆசிரியராகவும் அவர் பரிணமித்துள்ளார். 'மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கம்' (1961-1971) உருவாக முன்னின்று உழைத்ததோடு அதனை வழிநடத்தியவரும் அவரே!

கிறீஸ்தவரல்லாத அவரிடம் அனைத்துத் 'தொண்டன்' இதழ்களும் ஆவணமாக்கப்பட் டுள்ளதென்பது நமக்கெல்லாம் வியப்பைத் தரும் செய்தியாக இருப்பது மட்டுமல்லாது, நம்மை வெட்கித் தலை குனியவைக்கும் செய்தியாகவும் அது உள்ளதென்பதை நாம் உணர்வோமா....?

பண்பான அந்த மனிதருக்கு தொண்டன் சார்பாக மரியாதை செலுத்த தொண்டன் உலகமே கடமைப்பட்டுள்ளது.

■ அ.ச. பாய்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## "ஆசிரியம் வெற்றி பெற...."

இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்விப் பீட விரிவுரையாளர் திரு. க. ஞானரெத்தினம் அவர்கள் எழுதிய "ஆசிரியம் வெற்றி பெற...." என்னும் நூல் எம் பார்வைக்குக் கிட்டியது.

குமரன் புத்தக இல்லத்தினால் (கொழும்பு – சென்னை) வெளியிடப்பட்ட இந்நூல், ஆசிரியரின் அன்புத்தந்தை உயர்திரு. பொன் கணபதிப்பிள்ளை அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. அணிந்துரையை பேராசிரியர் சோ. சந்திரசேகரன் எழுத, ஆசிரியர் பற்றிய விளக்கத்தை பின்னட்டையில் கலாநிதி. அருட்சகோதரர் **S.A.I.** மத்தியு, **A.C** அவர்கள் வரைந்துள்ளார்கள்.

பார்த்தவுடனேயே மனதைக் கொள்ளை கொள்ளக்கூடியதான இப்புத்தகத்தில் கருத்தாழமிக்க பன்னிரெண்டு அத்தியாயங்கள் காணப்படுகின்றன. இவையனைத்தும் எளிய நடையில், இலகுவாக விளங்கக்கூடிய வகையில் எழுதப்பட்டுள்ளமை வியக்கவும், பாராட்டப்படவும் செய்கின்றன.

ஆசிரியம் வெற்றி பெற மனப்பாங்கு மாற்றம் அவசியம்; ஆசிரிய வாண்மையின் புதிய தோற்றம்; ஆசிரியம் – ஒரு பன்முகப் பார்வை; கலைத்திட்ட மறுசீரமைப்பு; வகுப்பறை முரண்பாடுகளும் முகாமைத்துவ உத்திகளும்; பல்கலைக்கழக அனுமதி முறையில் Z-score: உயர்வகுப்பிற்கான செயற்றிட்டம்; தேசிய பரீட்சை அடைவுகளும் சுய கற்றல் உத்திகளும்; கணித வழுக்களும் அதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகளும், க.பொ.த. (உ/த) பரீட்சையின் சமகாலப் போக்கு...; சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்; சுவாமி விபுலானந்தர் அவர்களின் கல்விப்பணி என்னும் தலைப்புகளில் அத்தியாயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

'ஆசிரியம் வெற்றிபெற, மனப்பாங்கு மாற்றம் அவசியம் என்னும் முதலாவது அத்தியாயம் ஒவ்வொரு ஆசிரியரும் அவசியம் வாசிக்கவேண்டியவொன்று. ஒருவர் நேர்மனப்பாங்கை வளர்த்துக்கொள்வதற்கான படிநிலைகளை இக்கட்டுரை விளக்குகின்றது.

ஆசிரியர் கல்வி, ஆசிரியரின் தொழில்வாண்மை, ஆசிரியர் வகிபங்கு என்பன பற்றி இரண்டாம் அத்தியாயம் சொல்லிச் செல்கின்றது.

ஆசிரியர் தொழில், ஆசிரியர் தகுதி, ஆசிரியர் அந்தஸ்து, ஆசிரியர் ஒரு முகாமையாளர் என்னும் விடயங்கள் பற்றி 'ஆசிரியம் ஒரு பன்முகப் பார்வை' என்னும் மூன்றாவது அத்தியாயம் விளம்புகின்றது.

பல்கலைக்கழக அனுமதி முறையில் Z-score என்னும் அத்தியாயத்தை கல்விப் புலத்தினர், மாணவர்கள், பெற்றோர் என்னும் பல தரத்தினரும் உள்வாங்கிக் கொள்வது அவசியம்.

கணிதம் என்றால் என்ன? கணித வழுக்கள், வழுக்களின் வகைகள், வழுக்கள் ஏற்படுவதற்கான காரணிகள், வழுக்களை குறைப்பதற்கான ஆலோசனைகள் என்னும் விடயங்கள் பற்றி ஒன்பதாம் அத்தியாயம் ஆராய்கின்றது.

தொடர் 17ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# புனிதர்களை அறிவோம்

- மற்றில்டா இராஜேந்திரம் -

மாசி - 2014

### மாசி 03ம் திகதி : புனித பிளேஸ்



இவர் ஒரு பக்திமான். பிறருக்காக இறைவனிடம் பரிந்து பேசுவதன் மூலம் வரங்களைப் பெற்றுக்கொடுத்தவர். முக்கியமாகத் தொண்டை நோயினால் வருந்தியோருக்காக இறைவனிடம் வேண்டி, நலமாகச் செய்தார். இவர் ஆயரும் மறைசாட்சியுமாவார். இளம் பராயத்திலேயே இறை விசுவாசம் காரணமாக மெய்யியலைக் கற்க ஆரம்பித்தார். பின்னர் வைத்தியராகப் பணியாற்றினார். பின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டுப் பணிவாழ்வை மேற்கொண்டார். ஆர்மேனியாவிலுள்ள செபஸ்டி எனுமிடத்தில் ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டார். பின் ஆளுநரான அக்ரி கொலஸ் என்பவனால் கைது செய்யப்பட்டார். சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படும்போது வழியில் ஒரு தாய், கலவரத்துடன் தொண்டை நோயினால் அவதியுறும் தன் குழந்தையைச் சுகப்படுத்தியுதவுமாறு அவரிடம் கெஞ்சினார். பிளேஸ் செபித்து இறைவேண்டல் செய்தபோது குழந்தை பூரண சுகம் பெற்றது. அந்நேரந் தொடக்கம் இறைவன் இவரது உதவியால் இத்தகைய நோய்களிலிருந்து அனேகரைக் குணமடையச் செய்தார். 316ம் வருடத்தில் பல கொடூர சித்திரவதைகளின் பின் சிரச்சேதம் செய்யப்பட்டார். ஆனாலும், இவரது பரிந்துரை தொடர்ந்தது. மக்களது தொண்டை சம்பந்தமான நோய்களைக் குணமாக்கியது. இதனால், இவர் பிரசித்தமானார். அப்போதிருந்தே குருக்களால் இரு மெழுகுதிரிகள் தர (X) அடையாளமாகக் கட்டப்பட்டுக் கழுத்தைத் தொட்டுப் புனித பிளேசை நோக்கிச் செபிக்கையில் இறையருளால் தொண்டை நோய்கள் மட்டுமல்லாது, வேறு தீங்குகளிலிருந்தும் மக்கள் குணமாகத் தொடங்கினர். இவ்வழக்கம் இன்றுவரை தொடர்கிறது.

### மாசி 05ம் திகதி : புனித அகத்தா



இவர் புகழ்பெற்ற சிசிலியா நகரில் வாழ்ந்த ஓர் இளநங்கை ஆவார். பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தார். தைரியமானவரும், நற்குணமும், நல்லொழுக்கமும் கொண்டவருமாகக் காணப்பட்டார். ஓர் உரோம அதிகாரியின் வேண்டுகோளை நிராகரித்ததால் 251ம் வருடம் டேசியனின் சித்திரவதைக் கால கட்டத்தில் கட்டானியா எனுமிடத்தில் மறைசாட்சியாக மரித்தார். இந்நிகழ்வுக்குக் குறிப்புகள் உண்டு. ஆறாம் நூற்றாண்டு கால வரலாற்று நூலொன்றின்படி குவின்டானியஸ் எனும் உரோமை அதிகாரி அகத்தாவைக் கொடூரமான முறையில் பல சித்திரவதைகட்கு உட்படுத்தினானென்றும், அவரது மார்பகங்களை வெட்டினானெனவும் குறிப்பிடப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. பின் கரித்துண்டுகளைச் சூடாக்கி நன்கு சிவந்ததும் அதன்மேல் வீசப்பட்டார். அந்தநேரம் நில நடுக்கம் அந்நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**புதுவாழ்வு பிறக்கும்புத் தாண்டில்**

**புன்மைகள் தீமைகள் அகலும்**

**எதுவரினும் எதிர்கொள்வோ மெல்லாமே நல்லதுதான்**

**இதுவுண்மை யெதிர்கொண்டு நில்!**





ஏற்பட்டது. குவின்டானியஸ் மக்கள் தனக்கெதிராக எழும்பிவிடுவார்களோ எனப் பயந்தான். அகத்தா மீண்டும் உயிரோடு சிறைப்படுத்தப்பட்டு, சித்திரவதைகளைத் தாங்க முடியாது இறைவனுக்காக உயிர் நீத்தார்.



**மாசி 06ம் திகதி : புனித போல் மிக்கியும் தோழர்களும் :**

***1597ம்*** வருடத்தில், அதாவது புனித பிரான்சிஸ் சவேரியாருக்குப் பின் 45 வருடங்கள் கடந்த பிற்பாடு, ஜப்பானில் மறைபரப்பு அலுவலில் ஈடுபட்ட போல் மிக்கியும், அவரது உடன் பணியாளர்களான இன்னும் 25 பேரும் விசுவாசப் பணிமேற்கொண்டு நாகசாகியின் அருகில் மக்களைக் கவரும் நோக்குடன் யாத்திரையாகச் சென்றபோது கொல்லப்பட்டனர். இதற்குக் காரணம், அறிவற்ற ஒரு ஸ்பானியத் தலைவன், இவர்களனைவரும் ஜப்பானை வெல்ல ஸ்பானியருக்கும், போர்த்துக்கேயருக்கும் உதவி செய்பவர்களென அறிக்கை எழுதியதே. இவ்வாறு இறந்தவர்களுள் இயேசு சபையைச் சேர்ந்த ஜப்பானியக் குருக்களான போல்மிக்கி, ஜோன் கோட்டோ, ஜேம்ஸ் கிசேய் அத்துடன் ஆறு பிரான்சிஸ்கன் சபையினர், ஸ்பானியர் நால்வர்: அவர்கள் பீற்றர் பப்டிஸ்ற், மார்டின் டி அக்குயிரே, பிரான்சிஸ் பிளாங்கோ, புனித மிக்கேலின் பிரான்சிஸ் ஆவர். பிலிப் டிலாஸ் காசாஸ் எனும் ஒரு மெக்சிக்கோ நாட்டவர். இந்தியரான கொன்சாலோ கார்சியா ஏனையோர் ஜப்பானியர். இவர்களில் ஒரு போர்வீரர், ஒரு வைத்தியர் அத்துடன் பீடப் பணியாளர் ஆகியோரும் அடங்குவர். அனைவரும் மீட்பர் இயேசுவைப் போன்றே ஈட்டியால் குத்தப்பட்டு மறைசாட்சிகளாயினர். ஒரே சாயல் கொண்ட மறைசாட்சிகள் என இவர்கள் தூர கிழக்கு முழுவதும் கருதப்பட்டனர். 1862ம் வருடத்தில் இவர்கள் புனிதர்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டனர்.

## திருத்தைந்தை பிரான்சிஸ் அவர்களின் உரைகளிலிருந்து ....



- செபத்திலும், நற்செயல்கள் செய்யும்போதும், ஏழைகளுக்கு உதவும்போதும், நோயாளிகளைச் சந்திக்கும்போதும் நாம் இயேசுவைச் சந்திக்கின்றோம்.

- இளமையின் ஆர்வங்களை, ஆற்றல்களை மற்றவர்கள் திருடவோ, பலவீனமான சிந்தனைகளால் தங்களையே சிறைப்படுத்தவோ ஒருநாளும் அனுமதியாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## புனித தோமையார் கிறிஸ்தவர்கள்

இவர்கள் குறிப்பாக இந்தியாவின் தென் மேற்குப் பகுதிகளில் வாழ்ந்துவரும் ஒரு பழமையான கிறிஸ்தவ சமூகமாகும். இவர்கள் 6ம் நூற்றாண்டிற்கு முன்னிருந்தே இங்கு வாழ்ந்ததாய் ஆதாரங்கள் கூறுகின்றன. 17ம் நூற்றாண்டுவரை இவர்கள் கீழைத் தேய திருச்சபையின் ஒரு பகுதியாக தங்கள் விசுவாசத்திலும் வழிபாட்டு முறைகளிலும் ஒன்றுபட்டு இருந்தனர். இவர்கள் அனைவரும் புனித தோமை யாரின் மறைபரப்புப் பணியின் விளைவாகக் கிறிஸ்த வத்தை தழுவியவர்களாவர். ஆனால், இவர்கள் இன்று சீரோ மலபார் சபை எனவும் சீரோ மலங்கார் சபை எனவும் யாக்கோபித்தர் சபையெனவும் மார் தோமாஸ் சபை எனவும் பல்வேறு பிரிவுகளாய்ப் பிரிந்துள்ளனர்.

திருத்தூதரான புனித தோமையார் இந்தியா விற்கும் வந்திருக்கலாம் என இன்று பொதுவாகப் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். திருத் தூதரான தோமா தென் இந்தியாவில் மலபார் கடற் கரையோரமாயுள்ள கிரங்கனூரை 52ல் வந்தடைந்து, இங்கு நற்செய்தியை அறிவித்து, பல இந்தியர்களை மனந்திருப்பி, இவர்களைக் கொண்டே கேரளத்தி லுள்ள கிரங்கனூரில் ஏழு கிறிஸ்தவ சமூகங் களை உருவாக்கினார். தொடர்ந்து சில ஆண்டுகள் இந்தியாவில் மறைபரப்புப் பணி புரிந்து இறுதியில் 72ல் சென்னை மைலாப்பூரில் மறைசாட்சியாய் மரித்தார்.

இவரின் மறைபோதகத்தால் மனம்மாறி கிறிஸ்தவத்தை தழுவியர்களும் அவர்களின் வாரிசுகளுமே இன்று புனித தோமையார் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர். மலபார் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் எனவும் அழைக்கப்படுகின் றனர். மலபார் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு சீரியாவோடு நெருங்கிய தொடர்பிருந்தது. இதைத் தொடர்ந்து 345ல் இடம்பெற்ற இடப்பெயர்வின்போது, கானான் நாட்டு தோமா தலைமையில் ஆண், பெண், சிறுவர், துறவியர் உட்பட ஏறக்குறைய 300-400 குடும்பங்கள் கிரங்கனூர் துறைமுகத் தில் கரையிறங்கி, நாட்டு மன்னனின் அனுமதி யுடன் வாழ்ந்ததாய் வரலாறு கூறுகிறது.

இவர்கள் மலபார் மன்னனின் அனுமதி யுடன் ஒரு பட்டணத்தையும், ஆலயத்தையும் கட்டினர். இவ்வாறு குடியேறிய சீரிய கிறிஸ்தவர் களிடையே வித்தியாசம் பேணப்பட்டு வந்தது. இவர்களில் இந்தியரைத் திருமணம் செய்தோர் ‘வடகும்பர்’ எனவும் இந்தியரைத் திருமணம் செய்யாதோர் ‘தென்கும்பர்’ எனவும் அழைக் கப்பட்டனர். இவர்களே நேரடியான தோமையா ரின் வாரிசுகள் எனக்கூறப்படுகின்றனர். இரண் டாவது குடியேற்றமானது 823ல் பேசியாவி லிருந்து மாசாபோர், சப்ரிசோ என்பவர்களின் தலைமையில் இந்தியாவில் கொல்லம் பட்டணத்தில் மேற்கொள்ளப்பட்டதாகும். இவர் களும் ஆலயம், பட்டணம் என்பவற்றை மன்ன னின் அனுமதியுடன் அமைத்துக் கொண்ட னர். சீரிய திருச்சபையும் தொடர்ச்சியாகப் பணி யாளர்களை இவர்களுக்கு அனுப்பிக்கொண்டே வந்தது.

22ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீங்கள் எப்படி...



பாடசாலைக்குச் செல்லாமலே, அனேகம்பேர் ஞானிகளாகவும், மேதைகளாகவும், கோடீஸ்வரர்களாகவும், வீரர்களாகவும், ஜனாதிபதிகளாகவும், எழுத்தாளர்களாகவும், பெரிய தொழில் அதிபர்களாகவும் பிரகாசித்துள்ளார்கள். இவர்களிடம் மொத்தத்தில் முதலீடே கிடையாது. வறுமைதான் பரம்பரைச் சொத்து. இவர்களுக்குப் பாடசாலைக்குச் செல்லவே வழியில்லை, வழிகாட்ட குருக்களுமில்லை. ஆனாலும், தன்நம்பிக்கை, விடாமுயற்சி, உழைப்பு, ஊக்கம், ஐம்புலங்களை அடக்கி வெற்றிகொள் ஆற்றல், தனக்குள் புதைந்திருந்த மாபெரும் சக்தியை இனங்கண்டு வெளியிற் கொண்டுவந்த திறமை, இறைநம்பிக்கை இவை அனைத்துமே இவர்களைச் சாதனையாளர்களாக உயர்த்திவிட்டது.

தோமஸ் அல்வா எடிசனை பாடசாலை ஏற்கவில்லை. மடையன் என மட்டந்தட்டி வெளியேற்றியது. மின்குமிழ் உட்பட 154 மின் உபகரணங்களை இனங்கண்டார் அவர்!

ஹெலன் கெல்லர் கண்தெரியாது, காது கேளாது, பேசமுடியாது. ஆனாலும், உலகம் போற்றும் ஆங்கில எழுத்தாளர்.

வழிப்பறிக் கள்ளனாகச் செயற்பட்ட 'வால்மீகி' சமஸ்கிருதத்தில் இராமாயணத்தை எழுதினார். இவரும் பாடசாலை செல்லவில்லை. சமூகத்தால் 'கள்ளன்' என்று முத்திரை குத்தப்பட்டவர்தான்.

ஆபிரஹாம் லிங்கன் இரவற் புத்தகம் வாங்கிப்படித்து, அமெரிக்க ஜனாதிபதியாக முத்திரை பதித்தவர்.

சாகுந்தலம் நூலை எழுதியவர் பிறவியில் ஊமையான மகாகவி காளிதாசர். இவரும் பாடசாலை செல்லவில்லை.

பெஞ்சமின் ஃபிராங்ளின் - இவரும் பாடசாலை செல்லவில்லை. இவரது சாதனைகளை நீங்கள் மீட்டுப் பாருங்கள்.

பெஞ்சமின் ஃபிராங்ளின் குடும்பத்தோர் இங்கிலாந்தில் இருந்து பிழைப்பை நாடி அமெரிக்காவிற்கு 1683ல் பாஸ்டுன் நகரிற் குடியேறி, மெழுகுவர்த்தி தயாரித்து மாதாகோவில் முன் விற்று, அந்த வருமானத்தில் வாழ்க்கையை நகர்த்தி வந்தார்கள். பெரிய குடும்பம், படிப்பறிவில்லாதவர்கள். 1706ல் பெஞ்சமின் இக்குடும்பத்தில் பிறந்தார். அரைவயிற்று உணவிற்கே வழியற்ற அக்குடும்பத்தின் மகன் பெஞ்சமின், முதலாம் வகுப்பைக்கூட பூர்த்திசெய்ய முடியாது பாதியில் நின்றார். அவரது அண்ணனின் அச்சகத்திற்குப் பிழைப்பிற்காக அனுப்பப்பட்டார். ஓய்வுநேரங்களில் அச்சுக்காக வந்த புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தார். தான் உழைத்த பணத்திலும் வேறு புத்தகங்களை வாங்கிப் படித்தார். இதனால் அறிவும் வளர அச்சுத் தொழிலும் கைவந்த கலையானது.



வயலற் சந்திரசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

> "அறிவைத் திரட்டுவதற்கு மூலதனம் தேவையில்லை. பின்னாளில் அவன்தான் அறிஞனாக, ஞானியாக, மகாத்மாவாக மாறுகின்றான்". - **பெஞ்சமின் ஃபிராங்கிளின்**

தனக்கே சொந்தமாக அச்சகத்தை ஆரம்பித்து பத்திரிகை, புத்தகங்கள் என எழுத ஆரம்பித்தார். இவரால் வெளியிடப்பட்ட பத்திரிகையான "FRANKLINS POOR RICHARA'S ALMANACK" என்ற பத்திரிகை அமெரிக்காவில் ஒரு புதிய எழுச்சியையே உருவாக்கியது.

"அறிவு - வெற்றி - செல்வச் செழிப்பு - சம உரிமை" இதுதான் இன்றைய அமெரிக்காவின் தாரக மந்திரம். இந்த மந்திரத்தை மக்கள் மத்தியில் பதிய வைத்தவர் ஃபிராங்ளின் என்று சொன்னால் அது மிகையாகாது. இவர் எழுத்தாளராக, அச்சுக்கோப்பாளராக, தத்துவஞானியாக, அறிவியல் மேதையாக, ஜனநாயகவாதியாக, சட்டம் இயற்றுபவராக, சொற்பொழிவாளராக, ஒரு கோடீஸ்வரராகவும் வாழ்ந்ததோடு, மருத்துவமனைகளையும் கட்டினார். தீயணைப்புக் காப்பீட்டுக் கழகத்தை நிறுவினார். காகித உற்பத்தி, காகிதப் பணம் அச்சிடல் போன்றவற்றில் ஈடுபட்டதோடு, வீதிச் சுத்திகரிப்பு நிறுவனத்தையும் அமைத்தார். "பென்சில்வேனியா" பல்கலைக்கழகத்தையும் உருவாக்கினார். 1789ல் அமெரிக்கா சுதந்திரம் பெற்றதும் முதன்முதல் ஜனாதிபதியான ஜோர்ஜ் வாஷிங்டனின் தோழராகவும் விளங்கினார். ஜோர்ஜ் வாஷிங்டன், ஃபிராங்ளினின் தலைமையில் ஒரு குழுவை நியமித்து அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்றச் சொன்னார்.

பெஞ்சமினால் எழுதப்பட்ட "சுயசரிதை" அமெரிக்கர்கள் ஒவ்வொருவரது இல்லத்து நூலகங்களிலும் இருக்க வேண்டுமென்று ஜோர்ஜ் வாஷிங்டனே புகழ்ந்து கூறியுள்ளது குறிப்பிடற்பாலது.

அமெரிக்கா சுதந்திரம் அடைந்ததும் இரண்டு அஞ்சற் தலைகளை வெளியிட்டது. ஒன்று, ஜோர்ஜ் வாஷிங்டனுடையது. மற்றையது, பெஞ்சமின் ஃபிராங்ளினுடையது.

பார்த்தீர்களா...? முதலாம் வகுப்புப் பாடத்தையே முடிக்காத பெஞ்சமின் ஃபிராங்ளின் ஒரு பல்கலைக்கழகத்தையே கட்டி முடித்ததுடன், அன்று அமெரிக்காவின் மூன்றாவது கோடீஸ்வரராகவும் விளங்கினார்.

அப்படியெனில் உங்களிடமுள்ள திறமைகளை நீங்கள் ஏன் இனங்காண முடியாது...?
"தேடுங்கள் கண்டடைவீர்கள்" .

ஒருவரிடம் இன்னுமொருவர் கூறினாராம், "நானும் ஃபிராங்ளினைப்போல சாதனைகளை நிலைநாட்டி இருப்பன், எல்லாத்தையும் எங்கட அப்பா கெடுத்துப் போட்டார்" என்று கவலைப்பட்டாராம். அதற்கு மற்றயவர் கேட்டாராம், "அதெப்படி அப்பா உங்கட சாதனைகளைக் கெடுத்தார்...?"
"என்னப் பள்ளிக்கூடத்தில சேர்த்ததோட விட்டாரா, ஒருநாள்கூட வீட்ட நிற்கவே விடாம பாடசாலைக்குப் போடா... போடா.... எண்டு அடிச்சார், பாடசாலையால வந்து சிந்திப்போமெண்டால், பாடசாலையில படிச்சதையே மீண்டும் படிக்க ரியூசனுக்குப் போடா.... போடா என்று விரட்டி அடித்தார். என்ர சிந்தனை, ஆற்றல் ஸ்தம்பிதமாக ஆசிரியர்களின்அறிவு மட்டத்துக்கு மேல எனக்கு உயரமுடியல்ல.... ஒருவேள, பெஞ்சமின் ஃபிராங்கின், தோமஸ் அல்வா எடிசன், மகாகவி காளிதாசர் போன்றோர் எனக்கு ஆசிரியராக வந்திருந்தா என்ர கணக்கு வேற, அல்லது என்னப் பள்ளியில சேர்க்காம விட்டிருக்கோணும்...." என்று அடித்துக் கூறினாராம் அந்த நபர்.
இது எப்படி இருக்கிறது....?
நீங்க எப்படி...? சோக்கிறட்டீஸ் கூறியது போலவே,

**"உன்னையே நீ அறிவாய்"** ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வழமைபோல் மீனாட்சி படலையடியில் வந்து நின்றாள். இதுவே, அவளது பொழுதுபோக்கு. பொழுதுபோக்கு என்பதைவிட இயல்பான சுபாவம் என்பதே பொருந்தும்.

சாதாரண பெண்களைப்போல் எவர் வீட்டுக்கும் போய் வம்பளக்கமாட்டாள். ஆயினும், தனது படலையடியில் நின்று வக்கணை சொல்வதில் அவளுக்கு நிகர் அவளேதான்.

தங்கம்மா மகள் அமுதாவுக்குத் திருமணநாள் நெருங்கிக்கொண்டிருந்தது. அவள் அழைப்பிதழ் தரவந்து எங்கே வீட்டுப் படியேறி உள்ளே வந்துவிடுவாளோ என்ற மனப் பயந்தான், இந்தப் படலையடித் தியானம். தியானமல்ல, பிரசன்னம். எதிர்பார்த்தது போலவே அவளும் வந்தாள்.

"மாமி உள்ளுக்க வாங்கோ, என்ர மகளுக்குக் கலியாணம் என்று தெரியும்தானே..... அதுதான் கார்ட் கொண்டுவந்தனான்......"


அவள் தயங்கியபடியே திணறினாள்.

"அட, இது தெரியாதா எனக்கு? நான் ஒன்றும் குறைநினைக்க மாட்டன். நீ தா பிள்ளை ..... உனக்கும் ஆயிரம் அலுவல்களிருக்கும்.... ஒவ்வொருத்தரோடும் மினக்கட நேரமெங்கை......?"

கையை நீட்டினாள்.

"மாமி ...... நீங்கள்தான் முதல்ல ஆரத்தி எடுக்க வேணும், அதுதான் ......"

தயங்கியபடியே அழைப்பிதழைக் கையளித்தாள். எப்படி வீதியிலேயே கொடுத்துப் போவதென்று அவளுக்குச் சங்கடம்.




- வீக்கேயெம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"மெய்யேடி பிள்ளை .... உன்ர கொண்ணருக்கும் சொன்னனியோ....? அந்தாள்தான் உன்னோட கோபிச்சிருந்தாலும் சொந்தச் சகோதரம் பார்.... நீ தங்கச்சிதானே ..... போய்ச் சொன்னியென்றால் மனம் குளிர்ந்து மனிசன் மாறிவிடுவான். போடி பிள்ளை!"

கண. மகேஸ்வரன்

ஆயிரம் வேலையிருக்கும் என்று அவசரப்படுத்தியவள், அவளின் ஆதங்கத்தைப் புரிந்துகொள்ளாத மாதிரி, பதிலளிப்பதைத் தவிர்த்து, அவளைச் சீண்டிவிட்டதில் மாமிக்குப் பெரிய சந்தோஷம்.

தங்கம்மா வார்த்தையின்றித் தவித்தாள். பதில் சொல்வதைத் தவிர்த்து, மெல்லத் தலையாட்டியபடியே நகர்ந்தாள்.

'இந்த மனிசிக்கு மற்றவையின்ர பிரச்சினையள் வாய்க்கு மெல்ல அவல் கிடைச்சமாதிரி ..... இது வரப்போறதுமில்லை.... ஏதோ எங்களின்ர கடமை'

மனதுக்குள் திட்டியவாறு நடையைக் கட்டினாள் தங்கம்மா.

"என்ன மீனாட்சி ...... நீதான் முதல் ஆரத்தி எடுக்கிறதென்று கேள்விப்பட்டன் ......... நீ ஒரு ஆயத்தமும் இல்லாமல் இங்கை நிற்கிறாய்?"

"ஓ...... ஓ..... அதொன்றுதான் இல்லாத குறை? படலையடியில நிண்டு சொன்னால் நானேன் போக.....? சொந்தத் தமயனோடயே முடை ...... அந்தாளுக்குச் சொல்லயில்ல என்டு கேள்வி. தாய்மாமனே இல்லாமல் நடத்துற சடங்குக்குப் போயென்ன, விட்டென்ன....? போறவை போய் வடிவாய் வயித்தை நிரப்பிக்கொண்டு வாங்கோ!"

குத்தலாய்க் குதர்க்கித்தாள் மீனாட்சி.


சொர்ணத்துக்கு முகம் கறுத்தது.

'இந்த மனிசிக்கு ஊருலகத்தில தனக்குப் பட்டமென்ன எண்டே தெரியாதமாதிரியெல்லே கதையளக்கிறாள் ....... ம்..... இவளின்ர வீட்டில நடக்கிற கொண்டாட்டமோ இழவோ, வாறவையும் படலையோட திரும்பினால்தான் புத்தி வரும்.... அதுவும் உத்தரவாதமில்லை'

மனதுக்குள் கறுவிக்கொண்டாள் சொர்ணம், மறுகணமே சுதாகரித்துக் கொண்டாள்.

'பிறகு இவளுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசம்....?'

● ● ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சராசரி மனிதன்

பைந்தமிழ்க்குமரன் டேவிட்

என்னைக் கௌவிக் கொண்ட
காகமொன்று
குச்சிக்கூட்டினுள்
குஞ்சுகள் நடுவே வைத்தது
அரசனாய் அமர்ந்திருந்தேன்
குயில்கள்
குரலெடுத்துப் பாடின
மயில்கள் நடமாடின
தேன் கொடுத்தன தேனீக்கள்
மாம்பழமூட்டின அணில்கள்
ஏனிந்த ஏற்பாடு என்றேன்
ஒவ்வொன்றும் பேசின
நீ பாரதியின் குழந்தை
ஷெல்லியின் சகோதரன்
உமர்கையாமின் உறவினன்
உன் சிந்தனைகளை
இதயச் சிற்றறைகளுள்
சிறை வைத்துள்ளோம்



கண்கள் கலங்கிற்று
சிறகிரண்டாலும் எனைமூடி
முத்தமிட்டது பேடைக்குயிலொன்று
காதல் பறவைகள் கண்ணடித்தன

மனிதரின் சூழலைத் தூய்மைப்படுத்தும்
ஆகாயத் தோட்டிகள் நாங்கள்
அழுக்கானாலும் பகிர்ந்துண்போம்
ஒற்றுமையைக் கற்றுக்கொள்
எங்களிடம் என்றது காகம்

மூத்த அணிலொன்று முன் வந்து
முகர்ந்து பார்த்த பின்
அரசியல் வாடை வீசவேயில்லை
இவன் நல்லவன் என்றது

தும்பியொன்று என்னைத் தூக்கிச்
சுற்றிவந்து இறக்கிய பின்
அநியாய வாழ்க்கை வாழாததால்
சுமையில்லாத சுகமானவன் என்றது

இதயத்தைப் பிளந்து இருகூறாக்கி
தேடிக்களைத்த தேன் சிட்டொன்று
பாசம் நேசம் பரிவுடன் கருணை
இவையே உள்ளன இவன் இனியவன் என்றது

எம்பிக் குதித்தது என்னிடம் ஆணவம்
மமதை வந்து மார்தட்டி நின்றது
உடல் விறைத்து உறுமிக் கொண்டது
மிரள விழித்து ஏளனமாய்ப் பார்த்தேன்
எல்லா உயிர்களும் ஏங்கிப் போயின
எட்டி உதைத்தன குப்புற விழுந்தேன்
பூக்கடை புதுமணம் பறிபோக
சாக்கடை சகதியில் புரண்டேன்
த்தூ.... இவனும் சராசரி மனிதன்தான்
துப்பிக் கழித்தன எச்சில் திவலைகள்
துன்பம் மேலிட
தள்ளாடி நடந்தேன்
நானும் சராசரி மனிதன்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காணிக்கைத் தாய்

மனிதர்களாகிய நாம் காணிக்கை வழங்குவதாய் இருப்பின் பணமாக, பொருளாக, உலர் உணவுகளாக வழங்குகின்றவர்களாய் இருப்போம். இதைவிட ஒருபடி மேலே சென்று உயிர்களை, விளைபொருட்களை கடவுளுக்குக் காணிக்கையாக்குபவர்களும் உலகில் இல்லாமல் இல்லை. எது எப்படி இருப்பினும் காணிக்கை வழங்கும்போது மறைவாக, விளம்பரமின்றிக் கொடுத்துவிடும்படி, முகமலர்ச்சியோடு, அகமகிழ்ச்சியோடு அதனை அர்ப்பணிக்க வேண்டுமென்று திருவிவிலியம் கற்பிக்கிறது.



இயேசு கோயிலில் காணிக்கைப் பெட்டியருகில் அமர்ந்திருந்தபோது பலர் காணிக்கை செலுத்துவதனைக் காண்கின்றார். உள்ளவர்கள் பலர் தங்களிடம் உள்ளவற்றில் மிகுதியாகக் காணிக்கை செலுத்தினார்கள். ஆனால், ஏழைக் கைம்பெண் ஒருத்தி தன்னிடமிருந்த இரண்டு காசுகளை காணிக்கையிட்ட சம்பவத்தை இயேசு பாராட்டினார். (லூக்கா 21:1-4)

நம் ஆதிப் பெற்றோர் ஆதாம்-ஏவாளின் புத்திரர்கள் காயின்-ஆபேல் செலுத்திய காணிக்கை பற்றியும் பார்ப்போம். காயின் நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவருக்குக் காணிக்கை கொண்டுவந்தான். ஆபேல் தன் மந்தையிலிருந்து கொழுத்த, தலையீறுகளைக் கொண்டுவந்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்கினார். (தொ.நூல் 4:5-5) இங்கு கொழுத்த, தலையீறு இறைவன் விரும்பி ஏற்றுக்கொண்ட காணிக்கையாக இருப்பதனை அறிய முடிகிறது.

இந்தக் கருத்தோடு தூய கன்னிமரியாளை உற்றுநோக்கினால் அவள் தன் தலைப்பேறான மகனை, ஒரே ஓர் ஆண்மகனை எருசலேம் தேவாலயத்தில் கடவுளுக்குக் காணிக்கையாக்கி காணிக்கைகளில் உயர்வான காணிக்கையை, கடவுளுக்கு உவப்பான காணிக்கையைச் செலுத்திய அன்னையாகக் காட்சி தருகின்றார். இதனாலேயே அவளைத் 'தூய காணிக்கை அன்னை' என்று திருச்சபை பாராட்டி, மகிழ்ந்து பெப்ரவரி மாதம் 02ம் திகதி அவளுக்கு விழா எடுத்து மகிழ்ந்து நிற்கிறது.

கிழக்கு மாகாணத்தில் இந்த அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரே ஓர் ஆலயம் என்றால் அது தாண்டவன்வெளி தூய காணிக்கை அன்னை ஆலயமே! வருடந்தோறும் பெப்ரவரி மாதம் 02ம் நாளில் கொண்டாடப்படும் இத்திருவிழாவில் ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆண்டவன் பாதம் காணிக்கை ஆக்கப்படுவது ஒரு சிறப்பம்சம் ஆகும். இம்முறை பெப்ரவரி மாதம் 02ம் திகதியே ஆலயத் திருவிழாவும் சிறப்பிக்கப்பட இறையருள் கூடியிருப்பது அதிலும் சிறப்பாகும்.

22ம் பக்....

■ ஜே. பத்திநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டனின் சில நிமிடங்கள்...

- ஜனாதீஜ -

இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்கட்காக' நாம் சந்திப்பது கொன்ஸ்டன் கிஷான் என்னும் 19 வயது இளைஞரை (சிறுவனை என்றும் சொல்லலாம்). மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கற்று, க.பொ.த (உ.த) பரீட்சையில் கணித பிரிவில் தோற்றியுள்ள மாணவரே இவர். குறுந்திரைப் படங்களை இயக்கும் ஆர்வமுள்ள இவரை தொண்டனுக்காகப் பேட்டி கண்டோம்.



■ உங்கள் குறுந்திரைப்படங்கள் பற்றிக் கூறமுடியுமா?

□ நான் முதன் முதலில் இயக்கிய குறுந்திரைப்படம் 'சல்லி' என்பதாகும். இது சுமார் 36 நிமிடங்கள் ஓடக் கூடியது. இது பணத் தாசை கூடாது என்னும் செய்தியைச் சொல்கிறது. எனது முதற்படமான 'சல்லி' எனக்குப் பூரண திருப்தியைத் தந்தது என்று சொல்வதற்கில்லை. ஆனால், அது நல்ல அனுபவத் தைத் தந்தது. நானும் எனது வகுப்புத் தோழர்களும் அப்படத்தில் பணியாற்றி னோம். எங்களுக்குத் தெரிந்தமாதிரி அதைச் செய்தோம் என்றாலும் எங்களுக்கு அது புதிய பாதையைத் திறந்துவிட்டது. ஒளிப் பதிவு, ஒளியமைப்பு, ஒலிப்பதிவு, இசை என்பனவற்றில் விட்ட பிழைகள் என்னவென்று நான் அனுபவ ரீதியாக உணர்ந்துகொண்டேன்.

இரண்டாவது படமாக 'வண்ண ஓவியங்கள்' என்னும் 6 நிமிடங்கள் ஓடும் குறும் படத்தை இயக்கினேன். அப்படம் சிறப்பான வரவேற்பைப் பெற்றது. இது திருத்தமாக வந்திருந்தது.

'அப்துல்கலாம் என்ன சொன்னாரு' என்னும் 26 நிமிடப்படம் மூன்றாவது வெளியீடாக அண்மையில் வெளிவந்தது. இதில் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சொல்லியுள்ளேன். இதன் வெளியீடு மட்டக்களப்பு YMCA மண்டபத்தில் இடம் பெற்றது. ஒரு வெளியீடாக விழா இடம்பெற்ற முதல்படம் இது.

'அப்பா ஹப்பி அண்ணாச்சி' என்னும் நான்காம் குறும்படம் இறுதிக்கட்ட வேலை களில் இருக்கின்றது.

■ நீங்கள் 'இயக்கம்' பற்றி முறையாகக் கற்றுள்ளீர்களா....?

□ இல்லை. இது சம்பந்தமாக நிறைய தேடல்கள் செய்துள்ளேன். இணையத்தில் அதிகமாகத் தகவல்கள் பெற்றுள் ளேன். மற்றும்படி ஏகலைவன் தான்

■ தயாரிப்பு, வெளியீடுகள் தொடர்பான முதலீடுகளினை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றீர்கள்?

□ பெற்றார்கள், நண்பர்கள் உதவியின் மூலந்தான் சாதிக்கின்றேன். இது தொடர்ந்து சாத்தியமானதல்ல என்பதும் உண்மைதான்.

■ உங்கள் படைப்புகள் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்பட்டுள்ளனவா...? ?

□ 'வர்ணம்' தொலைக்காட்சியில் 'அப்துல் கலாம் என்ன சொன்னாரு' குறும்படம் ஒளிபரப்பப் பட்டது. நேரக் கட்டுப்பாடு காரணமாக சில நிமிடக் காட்சிகள் தவிர்க்கப்பட்டிருந்தன. வேறு சில அலைவரிசைகளும் எனது படங்களைக் கோரியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

■ **இத்துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால் கள் எவை?**

□ போதிய பயிற்சிகள் பெறுவதற்கு வாய்ப்புகள் எமது பகுதியில் இல்லை. குறிப்பாக, தமிழ் மொழி மூலம் இலங்கையிலே சந்தர்ப்பங்கள் அரிது. இல்லாவிட்டால் தென்னிந்தியாவிற் குத்தான் போகவேண்டும். அதற்கான பொரு ளாதார வாய்ப்புகள் எம்மிடம் இல்லை.

நல்ல, தேவையான தொழில்நுட்ப உப கரணங்களைப் பெற்றுக்கொள்வது குதிரைக் கொம்பான காரியம். இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தித்தான் படம் செய்கின்றோம். சாதாரண புகைப்படக் கமராக்களைப் பயன் படுத்தித்தான் படப்பிடிப்புகள் செய்கின்றோம். சிங்கள சினிமாத் துறையினருக்கு இருக்கும் வசதிகள் எம்மவர்க்கு இல்லை.

பொருளாதாரப் பிரச்சினை காரணமாக முதலீட்டாளர்கள் கிடைப்பதில்லை. முதலீடு செய்பவர்கள் முதலீட்டை எவ்வாறு மீளப் பெறமுடியும்? சந்தை வாய்ப்புகள் துப்பரவாக இல்லை.

எங்களைப் போன்றவர்களை ஊக்கு விப்பவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். சிலர் விளையாட்டுப் பிள்ளைகளின் பயனற்ற முயற்சிகள் என்று எண்ணுகின்றனர்.

■ **இவற்றுக்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்...?**

□ போதிய தொழில்நுட்பப் பயிற்சிகள் தரப்பட வேண்டும். மத்திய அரசோ, மாகாண அரசோ இது தொடர்பான அமைப்புகள், நிறுவனங்கள் என்பனவற்றை நிறுவலாம். அல்லது தொழில் நுட்பக் கல்லூரிகளில் திரைப்படத் துறையை ஒரு பாடமாக அறிமுகம் செய்யலாம். பயிற்சிகள் வழங்கலாம். மட்டக்களப்பு ஆயர் இல்ல சமூகத் தொடர்பு நிலையமோ அல்லது வேறு அரசசார்பற்ற நிறுவனங்களோ இவ்வாறான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும்.

அனுசரணையாளர்கள் மூலம் பொருளா தாரப் பங்களிப்பைப் பெற்றுத்தர பொருத்தமான வர்கள் உதவ வேண்டும். குறிப்பாக தொலைக் காட்சி அலைவரிசை நிறுவனங்களின் உதவி யைப் பெற சம்பந்தப்பட்டவர்கள் உதவ வேண்டும்.

வடக்கு-கிழக்கில் குறும்படம் தொடர் பான ஈடுபாடு உள்ளவர்களை ஒன்றிணைத்து, அமைப்பொன்றை ஏற்படுத்தி, செயற்பாடுகளை மேற்கொண்டு இவ்வாறான பிரச்சினைகட்கு தீர்வுகாண முயலவேண்டும்.

■ **உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?**

□ ஒரு சிறந்த திரைப்படவியலாளனாக வர வேண்டும்; எமது சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும்.

**சிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரனான கொன்ஸ்டன் கிஷான் அவர்கள் மாகாண, தேசிய மட்ட சம்பியன் விருதுகள் பலவற்றை வென்றவர். பதின்மூன்று வயதிற்குட்பட்ட பிரிவில் 'இலங்கை டென்னிஸ் சம்மேளன' தரப்படுத்தலில் முதல் ஆறு இடங்களிற்குள் இடம்பெற்றவர். கணிதத் துறையில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்.**

**அவருக்குத் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம்.** ■■

**இலக்கிய மஞ்சரி...**

ஒவ்வொரு அத்தியாயங்களும் அறிமுகம் ஒன்றுடன் ஆரம்பிக்கப்பட்டு இறுதியில் முடிவுரையு டன் முடிவடைகின்றது. ஏற்கனவே சஞ்சிகைகளில் வெளிவந்த கட்டுரைகளே இன்று நூலாக்கம் பெற்றுள்ளன.

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள், சுவாமி விபுலானந்தர் அவர்களின் கல்விப்பணி போன்ற அத்தியாயங்கள் சிறப்பாகக் காணப்படுகின் றன.

கல்விப் புலத்தில் உள்ளவர்கள் மட்டுமல்ல ஏனையவர்களும் காசுகொடுத்து வாங்கிப் படித்து தங்களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெரித்தாஸ் தமிழ்ப்பணி நிகழ்ச்சிகளை இணையத்திலும் கேட்கலாம்...!

Radio Veritas Asia
Voice of Asian Christianity



றேடியோ வெரித்தாஸ் ஆசியா, தமிழ்ப்பணியின் முன்னாள் பொறுப்பாளரான அருள்தந்தை **A.** சிங்கராயன் அவர்கள் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தார்.

தற்போது றேடியோ வெரித்தாஸ் ஆசியாவின் உதவி நிகழ்ச்சி இயக்குனராக நியமனம் பெற்றுள்ள அவர், இருபது மொழிகளில் ஒலிபரப்பப்படும் வெரித்தாஸ் வானொலி நிகழ்ச்சிகளில் தமிழ் உட்பட ஆறு தென்னாசிய மொழிகளில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளை மேம்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளார். தமிழ்ப்பணி மற்றும் சிங்கள நிகழ்ச்சிகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், நவீன தொழில்நுட்பங்களை உள்வாங்கும் வெரித்தாஸ் ஒலிபரப்பை அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடல்களை நடத்தினார். இதற்காக, கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் போன்ற இடங்களுக்குப் பயணங்களை மேற்கொண்டு அங்குள்ள சமூகத் தொடர்புத்துறை இயக்குனர்கள், பணியாளர்களுடன் உரையாடியதோடு ஆலோசனை களையும் வழங்கினார்.

தற்போது வெரித்தாஸ் நிகழ்ச்சிகளை டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் 24 மணிநேரமும், ஏழு நாட்களிலும் அன்ராய்டு மொபைலிலும் கேட்க லாம். மொபைல் பயன்பாட்டினைப் பதிவிறக்கம் செய்ய Google Play விற்குச் சென்று RVA LIVE என டைப் செய்ய வேண்டும்.

மேலும், தமிழ்ப்பணியின் நிகழ்ச்சிகளை எதிர்வரும் மார்ச் 05ம் திகதி முதல் இணையத் தளத்திலும் கேட்கலாம்/படிக்கலாம்.

முகவரி: **www.rveritas-asia.org**

— மலர் —

## 2014ம் ஆண்டு பெப்ரவரி 11ம் தேதி கொண்டாடப்படும் 22வது உலக கத்தோலிக்க நோயாளர் தினத்திற்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி

திருஅவை, கிறிஸ்துவின் பிரசன்னத்தை நோயாளிகளில் சிறப்பாகப் பார்க்கின்றது என்றும், நம் ஒவ்வொரு துன்பத்தையும் அவரோடு ஒன்றித்து அவரில் எதிர்கொள்வதற்குத் தேவையான துணிச்சலைக் கடவுள் தருகிறார் என்றும் உலக கத்தோலிக்க நோயாளர் தினத்திற்கான செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஐந்து முக்கிய கருத்துகளை இச்செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ், பிறரன்பில் ஈடுபடுவது, குறிப்பாக, துன்புறுவோர், ஒதுக்கப்பட்டோர் போன்றோருக்குப் பிறரன்புப் பணிகளைச் செய்வது கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள நம்பிக் கைக்கு வைக்கப்படும் உண்மையான பரிசோதனை எனவும் கூறியுள்ளார்.

நமது அக்கறை தேவைப்படும் மக்களிடம் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நாமும் நமது சகோதரர்களுக்காக நம் வாழ்வை வழங்க வேண்டும் என்பது 22வது உலக கத்தோலிக்க நோயாளர் தினத்தின் மையக் கருத்தாகும்.

## திருத்தந்தையின் உரைகளிலிருந்து...

- நிகழ்காலத்தில் வாழத்தெரிந்தவர்களே கிறிஸ்தவர் கள். தமது காலத்தை எப்படி வாழவேண்டு மென்பதை அறிந்தவர்களே கிறிஸ்தவர்கள்.
- உலகப் பொருட்களில் நம்பிக்கை வைப்பவர் களுக்கு அல்ல, இறையன்பில் நம்பிக்கை வைப்பவர்களுக்கே இறையாட்சி உரித்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயணக் கட்டுரை

# தீர்க்க தரிசனங்களின் நிலம் 01

இது எனது பயண அனுபவம். அது என்பாற்பட்டது. எனது மனதுக்குப் பட்டதை அவ்வாறே பதிவுசெய்துள்ளேன். அதனை ஏற்பதோ இல்லை தவிர்ப்பதோ உங்கள்பாடு. வாசகரான உங்கள் புரிதலைக் கேள்விக்குள்ளாக்கும் எண்ணமும் எனக்கில்லை. எழுதியபின் அந்த எழுத்து வாசகனுடையதே என்பதை மாறுபாடின்றி ஏற்றுக்கொள்கிறவன் நான்.



மானுடம் மகா சாமான்யமானது. அதேவேளை மகா அற்புதமானது. அதன் சங்கைக்கு தர்மம், சத்தியம் ஆகியவற்றின் பரிபாலனம் தேவை. தன்னை அறிபவனே மெய்யான மனிதன். அந்த 'அறிதலே' அவனது ஜீவன் முக்தி எனப் பரிபூரணமாய் நம்புகின்றேன்.

கலாநிதி பாபா சாஹேப் அம்பேத்கார் எழுதிய 'Budha and his Darma' என்கிற ஆங்கில நூலில் வரும் ".........the Gods Over the sky....." என்கிற வரிகளை நேரடியாகத் தமிழாக்கஞ் செய்தால்,

அ.ச.பாய்வா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"வானத்தின் மேல் கடவுளர்" என்பது போன்ற அபத்தமான புரிதல்கள் கிட்டும். மாறாக, அந்நூலைப் பொறுத்தவரை "வையத்து வாழ்வில் வான்புகழ் எய்திய வர்கள்" என்றுதான் அமைய வேண்டு மென்கிறது எனது ஆங்கில அறிவு. என்னிலும் புலமையுள்ளோர் இதனை இன்னும் ஆழமாக்கவும் கூடும். தெய்வப் புலவரெனக் கருதப்படும் திருவள்ளுவர் கூட இதே கருத்தையே மொழிந்துள்ளார். நமது 'சீராக்' ஆகமத்தின் மறுபதிப்பு தான் திருக்குறளோ என்கிற ஐயப்பாடும் எனக்குண்டு.

ஒரு பயணக் கட்டுரைக்கு ஏனிந்த முன்னீடு எனச் சிலர் முகஞ்சுழிக்கக்கூடும். நான் மிகவும் நேசிக்கும் இயேசு என்கிற உன்னதர் வாழ்ந்து, அவர் காலடிகள் பட்ட, அவரது மூச்சுக்காற்று கலந்துல வும், தற்போது வெறியர்களால் இரத்த நிலமாக்கப்பட்ட ஜெருசலேமையும், அதனுடன் தொடர்புபட்ட இடங்களையும் ஒருமுறை தரிசிக்க வேண்டுமென்கிற நீண்ட நாளாசை அண்மையில் நிறை வேறியது.

இயேசுவில் எனக்குப் பிடித்ததே அவரது போர்க்குணம். வாழ்வியலுக்குப் பொருந்தாத யூத சட்டங்களுக்கெதிராக குரல்கொடுத்த அவரது ஆண்மை, தன்னையே இறைமகன் என்று சொன்ன அவரது ஞானம், பிரபஞ்சத்தின் ஊற்றே ஒளியென்கிற மெய்யறிவை உணர்த்திய விதம்.

இயற்கையெனும் நூலைத் திறக் கின்றபோதும், தன் உற்பத்தி விதிகளைப் படித்தறியும்போதுந்தான் கடவுள் எத்துணை அன்பானவர் என்பது புரியும்.

அன்று காயீன் தொடக்கி வைத்த தன் தொடர் கடலிலும், காற்றிலும், வானத்திலும் ஏன் பூமியிலும் 'கொன்று தின்' அல்லது 'கொன்று தின்னப்படு' என்பதே விதியாகியுள்ளது. அதுவே, மனித வளர்ச்சியின் உச்சமாகிப் போனது. மதத்தை இதற்கொரு 'சிண்'ணாகச் சேர்த்துக் கொண்டு பகடையாடும் ஒருவித அறிவு மோசடி நிகழுமந்தப் பூமியைக் காண வேண்டுமென்கிற உந்துதல்தான் என்னையங்கு இட்டுச்சென்றது.

அதனுள் நுழையுமுன், அதன் சுருக்கமான வரலாற்றுப் பின்னணியை அறிந்திருப்பது அவசியம்.

கடவுள் தன் விருப்பத்தையும், செயலின் மகத்துவத்தையும் மனித இனத் திற்குத் தெரியப்படுத்தும் பொருட்டு ஆபிரகாம் என்கிற மனிதரை மனிதர் மத்தி யிலிருந்து பிரித்தெடுத்து, உறுதியான வார்த்தைகளால் அவனுடன் உடன்படிக்கை செய்துகொண்டு, அவனது சந்ததியைப் பன்னிரண்டு கோத்திரங்களாகப் பெருகச் செய்து, அதனைப் பூமியிலே விசேசித்த சனமாகப் பிரித்துப் பாதுகாத்து, 'இஸ்ரேல்' என்றதற்குப் பெயர்சூட்டி, அந்தச் சனத்தின் மூலம் அற்புதங்களையும், அடையாளங்க ளையும், பலத்த செயல்களையும் நடப்பித் தார். அவர்களில் மேன்மையாக விளங் கிய 'யூதா' வம்சத்தார் விசேசித்தவர்களா யிருந்தபடியால் அப்பெயரால் அழைக்கப் பட்டவர்களே யூதர்களாவர்.

இந்த இஸ்ரேலியர்கள் கடவுள் சொன்ன பிரகாரம் கானானில் (இஸ்ரேல் அடங்கிய பலஸ்தீனம்) குடியிருந்தவர்கள். பின்னர் அங்கு ஏற்பட்ட பஞ்சத்தால் எகிப்தில் குடியேறி அடிமைகளாக 430 வருடங்கள் வாழ்ந்தனர். அவர்கள் கூக்குரல் கடவுள் சமூகத்துக்கு எட்டியதால் அந்தச் சனத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கக் கடவுள் 'மோசே' என்பவரைத் தேர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெடுத்துத் தலைவனாக்கி அவர் மூலம் அற்புதங்களாலும், பலத்த செயல்களாலும், அடையாளங்களாலும் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க செங்கடலை இரண்டாய்ப் பிளந்து, ஆறு லட்சம் யூதர்களைக் கடந்துபோகச் செய்தார். பின்னர் நாற்பது வருடங்களாக வனாந்தரங்களில் யுத்தங்களைச் செய்த அவர்களை, வாக்குப் பண்ணிய தேசத்திற்கு வழிநடத்தினார். இவ்வாறு இறை வாக்கின்படி பாலுந் தேனும் வழிந்தோடும் கானான் தேசத்தில் குடியேற்றம் செய்தார். ஆனாலும், இந்த வரலாற்றினுள் தொக்கி நிற்கும் மிகச் சூக்குமமான கேள்வியும் பதிலும் கவனிக்கத்தக்கது.

பலஸ்தீனத்தில் பெரும்பான்மை யார்? இரணடாயிரம் ஆண்டுகளுக்கு முன் யூதர். ஆயிரமாண்டுகளுக்கு முன் இருவரும். தற்போது, அரேபியர்கள். (யூதர்களின் தொடர்ச்சியான இடப் பெயர்வுதான் இதன் காரணமே தவிர வேறில்லையென்பது கவனிப்பிற்குரியது).

வடக்கே லெபனான், சிரியா எல்லைகளைத் தொட்டு நிற்கும் சீனாய்ப் பாலைவெளி, மேற்கே பெரிய கடலென்று அழைக்கப்படும் மத்தியதரைக் கடல், கிழக்கே ஜோர்தான், தெற்கே சீனாய்ப் பாலை நிலமென நான் பயணித்த பல்லாயிரம் கிலோ மீற்றர் தூர இடைவெளியில் நான் சந்தித்த, கேட்டுணர்ந்த, வாசித்தறிந்ததை, எழுத்தில் வடிப்பதென்பது இயலா என்பதை மனப் பூர்வமாய் ஒத்துக்கொள்கின்றேன். அதனையும் மீறி அந்த அனுபவத்தை மற்றவருக்குப் பகிர முற்படுவது சுய விளம்பரமாக முடியும். இலக்கியவாதி என்பவன் தன் வல்லபத்தை அன்றேல் மேதைமையைப் பாலிக்கப் புறப்பட்ட புத்திஜீவி என்று காமஞ் செப்புவதில் எனக்கொப்பில்லை.





அந்த ஜெருசலேமென்கிற மையப் புள்ளியைப் பின்னணியாகக் கொண்டு நிகழ்ந்தவை, நிகழ்பவை வேறொன்றுமல்ல, தனித்துவமான இரண்டு மதங்களின் வலுவான முரண்பாட்டுப் பின்னணியில், திறமை மிக்க அரசியல்வாதிகளால் எடுத்தாளப்படும் மக்களின் மத உணர்வு சார்ந்ததொரு பிரச்சினை.

மத்திய கிழக்கில் எண்ணெய் பெருக்கெடுத்தோடுகிறதோ இல்லையோ, பாலஸ்தீனத்திலும், இஸ்ரேலிலும் பெருக்கெடுத்தோடுவது மனித இரத்தமே!

'மதம்' என்பதற்கு 'உன்மத்தம்' என்றும் அர்த்தமுண்டு. அல்லாவின் பெயரால் 'காமாஸ்' போன்ற இயக்கங்களின் அட்டூழியம், (முகம்மது நபி, கலீபாக்கள், உமர்கள், என்றுமே பிற மதத்தை மதித்தவர்கள்) புனித 'தோரா' வின் பெயரால் யூதர்கள் புரிந்த கொலைகள், இயேசுவின் பெயரால், 'சிலுவைப் போர்கள்' இந்து மத வெறியர்களால் குஜராத் படுகொலைகள், பௌத்த வெறியர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மசூதி உடைப்பு போன்றவை இதற்குச் சில உதாரணங்கள்.

எந்தவொரு வரலாறும் ஏதாவது ஒரு பக்கச்சார்பின்றி எழுதப்பட்டதில்லையென்பது நம் வாசக அனுபவம். அதற்காக நாம் தூர அலையவேண்டியதில்லை. நம் இலங்கைச் சரித்திரமே இதற்குச் சான்று. இதற்குப் பெரும்பாலும் முன்னிலை வகிப்பன அரசியற் காரணங்களே!

இஸ்ரேல், பலஸ்தீனம் ஆகியவற்றினிடையே அடிக்கடி மாறி மாறிப் பயணஞ் செய்யவேண்டி நேரிட்டதால் இவ்வாறான திரிபுக் கதைகளை நிறையவே கேட்க வேண்டி நேரிட்டது.

1917ல் திடீரென ஒருநாள் அப்பிரதேசத்தை ஆண்டுவந்த பிரிட்டிஷ்காரர்கள் பாலஸ்தீனத்தைக் கூறுபோட்டு ஒரு பகுதிக்கு இஸ்ரேல் எனப் பெயரிட்டனர். பிறகென்ன.... பற்றிக்கொண்டது என்னவென்பது உலகமே அறிந்தது.

- தொடரும் ....

**காணிக்கைத் தாய்.....**

பரிசுத்த ஆவியால் தனக்கு அருளப்பட்ட ஒரே மகனான இயேசுவை அந்த இறைவனுக்கே காணிக்கையாக்கி இறைவனின் பரிவைப் பெற்ற தூய காணிக்கை அன்னை ஆலயத்தில் நம் பிள்ளைகளை அவள் முன்னிலையில் "அவர் சொல்வதை எல்லாம் செய்யுங்கள்" என்று கேட்டு நிற்கும் அன்னை விரும்புகிற மாதிரி எம்பிள்ளைகளும் நாமும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி மகிழ அவள் பாதம் அணி திரள்வோம். ஆலயப் பெருவிழாவை அர்த்தமுடையதாக்குவோம். ■

மன்னூர் பக்கம்

13ம் நூற்றாண்டில் பிரான்சிஸ்கன், டொமினிக்கன் துறவற சபைகளின் ஆரம்பத்துடன் நற்செய்திப் பணியாளர்கள் பல இடங்களுக்கும் சென்றனர். மார்க்கோபோலோ எனும் பயணி சீனா செல்லும் வழியில் 1293ல் இந்தியா வந்து சென்னை கொல்லம் பகுதிகளில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைக் கண்டனர். இவர்களைப் போன்றே இன்னும் பலர் மத்திய காலப்பகுதியில் இந்தியா வந்து தோமையாரின் வாரிசுக் கிறிஸ்தவர்களை சந்தித்ததாக வரலாறு கூறுகிறது. 1549ல் போர்த்துக்கேய மறைபரப்பாளர் இந்தியா வந்து இங்கு பணியாற்றும்போது ஒரு கற்சிலுவையைக் கண்டு பிடித்தனர். இது



போன்று இன்னும் 4 சிலுவைகள் கோட்டயத்திலும், கேரளாவிலும் ஏனைய பகுதிகளிலும் கண்டு பிடிக்கப்பட்டன. தண்டின்மீது வைக்கப்பட்டதாகவும் இறங்கிவரும் புறாவினால் சூழப்பட்டும், புரியாத எழுத்துகள் பொறிக்கப்பட்டும் இருந்த இவை பிற்காலத்தில் பேர்சிய மொழியைச் சார்ந்ததென கண்டுபிடிக்கப்பட்டது. இன்று 4 மில்லியனுக்கும் மேற்பட்ட தோமாஸ் கிறிஸ்தவர்கள் இருப்பதாயும் இவர்களிலும் 70% க்கும் மேற்பட்டோர் கேரளாவில் இருப்பதாயும் ஆதாரங்கள் கூறுகின்றன. இவர்களுக்காக 5 உயர் மறைமாவட்டங்கள், 26 மறைமாவட்டங்கள். இவற்றில் 13 மறைமாவட்டம் கேரளாவிலும் 12 மறைமாவட்டம் ஏனைய மாநிலங்களிலும் 1 மறைமாவட்டம் ஐக்கிய அமெரிக்காவின் சிக்காக்கோவிலும் இருக்கின்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வீட்டு மருத்துவம்

## ஊட்டச்சத்து நிறைந்த சோயா பீன்ஸ்

சோயா பீன்ஸ் தன்னிலுள்ள உயர்ந்த புரதம் (புரோட்டின்) மற்றும் மிகக் குறைந்த செறிவுள்ள கொழுப்பு காரணமாக இத்தனை ஆண்டுகால வரலாற்றில் ஒரு சிறந்த தாவர உணவு என்ற மதிப்பான இடத்தைப் பெற்றுள்ளது. எனவேதான், மேல்நாட்டு உணவு வகைகளில் சோயா பீன்ஸ் உணவுகள் ஒரு பெரிய இடத்தைப் பெற்றுள்ளன. இருந்த போதிலும் அண்மைக் காலமாக சோயா உணவுகளில் ஐசோ ஃபிளேவன்ஸ் அல்லது பைட்டோ ஈஸ்ட்ரோஜன்ஸ் எனும் தனிச் சிறப்பு வாய்ந்த உணவு மூலகம் உயர்ந்த அளவுகளில் உள்ளது என்பது புதிய செய்தியாகும்.

சோயாப் புரதம் நமது உடலிலுள்ள சீரம் கொலஸ்டிராலின் அளவுகளையும் குறைக்கின்றது. இவ்விளைவு செறிவேறிய கொழுப்புகள் அல்லது கொலஸ்டிரால் உட்கொள்வதில் உள்ள மாறுபாட்டினால் வருவது அல்ல. மற்ற கொலஸ்டிரால் குறைப்பு உணவுகளை விட சோயா உணவுகளை உண்டால் அதிக அளவிலேயே (13%) தீமை செய்யும் கொலஸ்டிரால் குறைகிறது. உண்ணும் சோயா உணவுகளின் அளவுக்கு ஏற்ப கொலஸ்டிரால் குறையும்.

உயர்தர புரதத்தை உயிர்ச்சத்துகளுடன் சேர்த்து வழங்கும் வெகுசில தாவரங்களில் சோயா மொச்சையும் ஒன்று. மக்கள் உற்சாகத்துடன் உடல் நலம் மிக்க வாழ்வு வாழ சோயா மொச்சை பெரிதும் உதவுகின்றது. சோயா மொச்சையில் நல்ல ஊட்டச்சத்துக்கு வேண்டிய பொருட்கள் மட்டுமன்றி நார்ப் பொருளும் உயிர்ச் சத்துகளும் கனிமங்களும் அடங்கியுள்ளன. மனித உடல் நலத்திற்கு வேண்டிய அனைத்து இன்றியமையாத அமினோ அமிலங்களும் சோயாவில் இடம்பெற்றுள்ளன.

சோயா மொச்சையில் அதிக அளவில் எண்ணெய் இருந்த போதிலும் அது தரமான கொழுப்பாகவும் அமைந்துள்ளது. சோயா எண்ணெயில் செறிவுள்ள கொழுப்பு குறைவாகவும், இன்றியமையாக் கொழுப்பு அமிலங்கள் நிறைந்த அளவிலும் அடங்கியுள்ளன. சோயா மொச்சையில் நீரில் கரையக்கூடிய கரையாத மிகச் சிறந்த நார்ப்பொருள் உணவும் உள்ளது.

மேலும், சோயாவில் ஊட்டச்சத்து செறிந்திருப்பதுடன் பைட்டோஸ்-டெரோல்ஸ், லெசித்தின் இன்ன பிற நன்மை தரும் கூட்டுப் பொருட்களும் உள்ளன. சோயாப் புரதம் எண்ணிறைந்த உடல் நல நன்மைகள் உடையது. புற்று நோய்த் தடுப்பு, கொலஸ்ரால் குறைப்பு, எலும்பு மென்பாட்டுக்கு எதிரான செயற்பாடு, மாத விடாயை ஒழுங்கு படுத்துதல் எனப் பல நன்மைகள் உள்ளன. ■



■ ஆனந்த சித்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பெத்லகேம் குறவஞ்சி

கிறிஸ்துவின் மேல் காதல் கொள்ளும் திருச்சபையின் உருவகமாக அறிமுகப்படுத்தப் படும் தேவமோகினி தன்னைத் தானே அறிமுகம் செய்துகொள்ளும் வகையில் அமைந்த பின்வரும் பாடல் நயத்தற்குரியது.

**ஒன்றுமிலாத காலம் நன்றாய்ப்**
**பொருளனைத்தும்**
**உண்டுசெய்தோன் மேற் காதல்**
**கொண்டவளும் யான்**
**அன்றுதவிதிராசன் சென்றுவாழ் எருசலேம்**
**அன்னையர் சீயோனருளும் கன்னிகையும்**
**நான்**
**என்றுமழியா வஸ்தாய் நின்றபரமகிறிஸ்து**
**ஏசுநாதருக் குகந்தமாசிலாதாள் யான்**
**மன்றல் கமழுங் கற்புக் குன்றா**
**மரியதாயார்**
**மாகனிக்கிசைந்த தேவமோகினி நானே**

என அப் பாடல் அமைகின்றது.

இப்பாடலில் உலகின் உருவாக்கிற்குக் காரணமானவனும், கற்பு குன்றாத தேவதாயின் மாசில்லாத மகனானவனும், அழிவு இல்லாதவனுமாக கிறிஸ்து சிறப்பிக்கப்படுவதனைக் காணலாம்.

மலை வளம் கூறுமாறு குறத்தியைக் கேட்க அவள் மலைவளம் கூறுவதாக அமைந்த பகுதியும் இடம்பெற்றுள்ளது. எளிமையான வடிவங்களைப் பயன்படுத்தியதன் மூலம் மக்கள் மனதில் நின்று நிலைக்கக் கூடியதாக இக் குறவஞ்சி அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

'குறத்தரு'

**தினதேந் தினத் தினதேந்தினத்**
**தினதேந்தினத் தினனா**
**தெந்தேந்தினத் தெந்தேந்தினத்**
**தெந்தேந்தினத் தினனா**
**வானவர்கள் கூடிவந்து தோத்திரங்கள்**
**படிப்பார்**
**வண்மையுள்ள சித்தரெல்லாம்**
**அருந்தவங்கள் பிடிப்பார்**
**ஞானமுடன் முல்லைநிலத் தலைவர்வந்து**
**தொழுவார்**
**நட்சேத்திரச் சாஸ்திரிகள் காணிக்கைகள்**
**தருவார்**

............................................................

**ஆதிமலை எங்களுக்கோ ஏதன் மலையம்மே**
**ஆண்டவனார் எங்களைத்தா**
**னமைத்தமலையம்மே**
**நீதியென்ற நால்வரமும்**
**கொடுத்தமலையம்மே**
**நித்தியமும் சாகாமல் நின்றமலையம்மே**

............................................................






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆரியனா ராத்துமலைநோவைமலையம்மே
அற்புதமாய்ப் பேழைவந்து
நின்றமலையம்மே
மோரியாவின் மலைதனிலே யாபிரகாமம்மே
முக்கியமா மீசாக்கைப்
பலிகொடுத்தானம்மே
மேரிபாவை மோசேசு
பிரம்புகொண்டேயடிக்க
மெத்தவெள்ள மானவிதஞ் சித்திரங்
காணம்மே
நேரிலுயர் கற்பனையின் மலையதுதான்
சீனாய்
நேர்மைபெத்த லேகமெங்கள்
பழையமலையம்மே

என மலை வளம் சிறப்பிக்கப்படுவதனைக் காணலாம். பாடற் பகுதிகளினூடாக வேதாகமச் செய்திகளும் கூறப்படுவது கவனிக்கத் தக்கது.

சிங்கன் சிங்கி உரையாடலாக வரும் பகுதி இரசனை மிக்கதாய் அமைந்திருப்பது படித்து இன்புறத்தக்கது. உதாரணத்திற்கு பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

இத்தனை காலமாய் என்னிடம் கேளாமல்
எங்கேநீ சென்றனை சிங்கி? – மா
பெத்தலே கேநகர் சீயான் குமாரிக்குப்
பக்திக் குறிசொலச் சிங்கா!

உற்ற துணையெனக் காருனைப்
போலொன்றும்
ஓதாமல் ஓடினாய் சிங்கி? - நான்
மெத்தப் பரிசுகள் பெற்றுவந் தேனெனை
முற்றுங் கவனியே சிங்கா!

இந்த உரையாடலில் தன்னை விட்டுச் சென்ற சிங்கியை அவள் சென்ற இடத்தினையும் அவள் பெற்றுவந்துள்ள செல்வங்கள் வந்த வகையினையும் சிங்கன் வினவுதலும் தேவ மோகினிக்குக் குறிசொல்லச் சென்றமையையும் அதன் பொருட்டுத் தான் பெற்ற செல்வங்கள் பற்றிச் சிங்கி கூறுவதையும் காணலாம்.

இறுதியாக வரும் வாழ்த்துப் பகுதி இறைபுகழ் உரைப்பதாக அமைந்துள்ளது. கிறிஸ்துவின் பெருமையும் மகிமையும் இதில் கூறப்படுகின்றன.

வாழ்த்துகிறேன் வாழ்த்துகிறேன்
மானுவேலை வாழ்த்துகிறேன்
தந்தையில்லாத் திருமகனைத்
தாதையருக் கொருமகனை
சந்தமரித் தலைமகனைக்
கலைமகனை வாழ்த்துகிறேன்

என்பதில் தன் சிறப்பான இப் பிறப்பில் தந்தையில்லாதவனாகவும், தாதையான பரம பிதாவிற்கு ஏக சுதனாகவும், தூய மரியன்னையின் தலைமகனாகவும், எல்லாக் கலைகளுக்கும் முதலானவனாகவும் உள்ளவராகக் கிறிஸ்து சித்திரிக்கப்படுகின்றார்.

தொடர்ந்து தீய அலகை வெற்றி பெறுவதற்கு இடமளிக்காது படத்தினையுடைய அதன் தலையை மிதித்து உலகை மீட்பதற்காக முள்முடியைச் சகித்துக் கொண்டவன் என்றும் கிறிஸ்து சிறப்பிக்கப்படுவதனைப் பின்வரும் பாடல் உணர்த்துகின்றது.

தீயலகைப் படைமுகத்திற்
செல்லாமற் படமுடியைத்
தானுதைத்து முண்முடியைச்
சகித்தவனை வாழ்த்துகிறேன்

மனுக்குலமீட்பராகவும், வேதமறையாளனாகவும், அனைத்துலகையும் காப்பவனாகவும், மனுவுரு எடுத்த கருணையாளனாகவும் சித்திரிக்கப்படும் கிறிஸ்து திரியேக தத்துவத்தின் மகிமைக்குரியவராகவும், அனைவருக்கும் பற்றுக் கோடாகவும் விளங்குவதனைக் கீழ்வரும் பாடல் கூறுகின்றது.

ஆராயக் கூடாத
அகண்ட திரியேக தத்துவ
அம்பரனை நம்பரனைத்
தம்பமென வாழ்த்துகிறேன்

திருச்சபை முழுவதற்கும் ஒரே தலைவனாக விளங்கும் கிறிஸ்து, பயப்படாதே என்று அடைக்கலம் அளிப்பவராகவும் சகல செல்வங்களும் உடையவராகவும் சிறப்பிக்கப்படுவதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கௌதமர் செய்த தவறு



கௌதமர் என்ற ஒரு முனிவர்
நாம் அறியாக் காலத்தில் இருந்தாராம்
அவர் அகந்தையினால் செய்த
அதே தவறைத்தான் இற்றைவரை
எல்லாக் கணவர்களும் செய்கிறார்கள்.
தவசியாக வாழ்ந்தவருக்கு
அழகான இளம் மனைவி எதற்கு...?
அதை மன்னித்துவிடுவோம்.
ஆனால், காமவெறி பிடித்த இந்திரன்
கௌதமரின் மனைவி அகலிகையை
அடைவதற்காகச் சூழ்ச்சி செய்தான்
கௌதம முனிவர்போல் உருமாறி
அகலிகையிடம் வந்தான்
அவனைத் தன் கணவன் என்றே கருதிய
அகலிகை அவனுடன் இணைந்தாள்
இதில் அகலிகை மனமறிந்து
எவ்வித தவறும் செய்யவில்லை.
ஆனாலும் கௌதமர் என்ன செய்கிறார்?
அவளைக் கல்லாகும்படிச் சபிக்கிறார்
இது அநீதியான தீர்ப்பு இல்லையா?
கௌதமர் ஒரு முனிவர், சகலமும் அறிந்தவர்
தன் மனைவி அகலிகை குற்றமற்றவள்
என்பதை அறியாமற் போனது ஏன்?
இன்றுவரை அவர் இராமாயணத்தில் வாழ்கிறார்
ஆனால் அகலிகை இராமனின் பாதம் பட்டு
உயிர்பெற மட்டும் முடிந்தது
அவளது வழிவந்த இன்றைய அகலிகைகள்
தங்கள் கணவர்களாகிய கௌதமர்களால்
செத்துப் பிழைக்கிறார்கள்
சித்திரவதை அனுபவிக்கிறார்கள்
இந்தக் கொடுமையை எந்த இராமன்
தீர்த்து வைப்பான்...?

— அருள்மணி —

**சபையனைத்துக் கொருகோனை**
**தமிழிசைக்கு வருவோனை**
**அபயந்தந்த பெருமானைத்**
**திறமானை வாழ்த்துகிறேன்**

இவ்வாறு தமிழ் இலக்கிய மரபில் பொது மக்கள் சார்ந்த எளிமையான இலக்கிய வடிவங்களுள் ஒன்றான குறவஞ்சி இலக்கிய வடிவத்தினைப் பயன்படுத்தி தமிழ் மரபிற்கு மாசு ஏற்படா வண்ணம் கிறிஸ்துவின் பெருமைகளையும், கிறிஸ்தவ நெறி முறைகளையும் 'பெத்லகேம் குறவஞ்சி' மூலம் வேதநாயக சாஸ்திரியார் படைத்துள்ளார். படைப்பாக்க வெற்றி காரணமாகவே இக் குறவஞ்சி இலக்கியம் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அதேவேளை கிறிஸ்தவ இலக்கிய மரபிலும் தனித்துவமான இடத்தினைப் பெற்று சிறப்புற்று விளங்குகின்ற தெனலாம்.

— முற்றும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

# விவிலியம் கற்போம் – 128

பரிசுப் போட்டி

முடிவுத் திகதி 28.02.2014

## யோசுவா : 7ம் அதிகாரம் 1–26 திருவசனங்கள்

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

இஸ்ரயேல் மக்கள் அழிவுக்குரியவை பற்றிய கட்டளையை மீறினர். யூதா குலத்தைச் சார்ந்த செராகின் மகனாகிய சபதியின் மகன் கர்மிக்குப் பிறந்த ஆக்கான் அழிவுக்குரியவற்றிலிருந்து சிலவற்றைக் கவர்ந்துகொண்டான். இஸ்ரயேல் மக்கள் மீது ஆண்டவர் ...................... மூண்டது. பெத்தேலுக்குக் கிழக்கே, பெத்தாவேனுக்கு அருகில் இருந்த ஆயி என்னும் நகருக்கு எரிக்கோவிலிருந்து யோசுவா ஆட்களை அனுப்பினார். அவர்களிடம், "சென்று, நாட்டை உளவறிந்து வாருங்கள்" என்றார். அவர்களும் சென்றார்கள். திரும்பி வந்து அவரிடம் "மக்கள் எல்லாரையும் அனுப்ப வேண்டாம். இரண்டாயிரம் அல்லது ...................... பேர் சென்று ஆயி நகரைத் தாக்கட்டும். மக்கள் எல்லோரும் சென்று களைப்படைய வேண்டாம். ஏனெனில், அங்குள்ளோர் சிலரே" என்றனர். மூவாயிரம் பேர் சென்றபோதும் ஆயி நகர ஆட்களுக்கு முன் தோற்று ஓடினர். ஆயி நகரத்தார் நகரின் வாயிலில் இருந்து செபாரிம் வரை துரத்திச் சென்று மலைச்சரிவில் ...................... பேரைக் கொன்றனர். எனவே, மக்கள் உறுதி இழந்தனர். யோசுவா தம் ஆடைகளைக் கிழித்துக்கொள்ள, அவரும் அவருடன் இஸ்ரயேலின் முதியோரும் ஆண்டவரின் பேழைக்கு முன் மாலைவரையில் தரையில் முகம் குப்புற விழுந்து கிடந்தனர். தம் தலைமீது புழுதியைப் போட்டுக்கொண்டனர். யோசுவா, "ஐயோ, ஆண்டவரே! மக்களை ...................... கையில் ஒப்படைத்து அழிப்பதற்காகவா யோர்தானைக் கடக்குமாறு செய்தீர்? நான் இப்போது என்ன சொல்வேன்? கானானியர் எம்மை அழித்து விட்டால் உமது பெயரைக் காக்க என்ன செய்வீர்" என்றார். ஆண்டவர் "எழுந்திரு, இஸ்ரயேலர் பாவம் செய்தனர். அதனால்தான் அவர்கள் புறமுதுகிட்டு ஓடினர். அவர்கள் ......................, எழுந்து மக்களைப் புனிதமாக்கு: நாளைய தினம் உங்களைத் தூய்மைப் படுத்துங்கள்' என்று கூறு. காலையில் நீங்கள் உங்கள் குலங்களுக்கு அருகில் வருவீர்கள்" என்றார். யோசுவா காலையில் எழுந்து இஸ்ரயேலை முன்வரச் செய்தார். செராகின் குடும்பம் பிடிபட்டது. ஆகவே, அவர் அக்குடும்பத்தை வீடு வீடாக முன்வரச் செய்தார்...................... பிடிபட்டது. எனவே, அவர் யூதா குலத்தைச் சேர்ந்தவன். யோசுவா ஆக்கானிடம் "என் மகனே, ஆண்டவருக்கு நன்றி கூறு. நீ என்ன செய்தாய் என்பதை மறைக்காமல் சொல்" என்றார். ஆக்கான் "நான் பாவம் செய்தேன்: நான் அழிவுக்குரியவற்றுள் ஓர் அழகான பாபிலோனிய மேலாடையையும், ஒரு கிலோ முந்நூறு கிராம் ......................, ஐந்நூற்று எழுபத்தைந்து கிராம் தங்கக் கட்டியையும் எடுத்துக்கொண்டேன். எனது கூடாரத்திற்குள் வெள்ளி அடிப்பகுதியில் இருக்க அவற்றைத் தரையில் புதைத்துள்ளேன்" என்றான். யோசுவா தூதரை அனுப்பி அவற்றைக் கொண்டுவரச் செய்து ஆண்டவர் திருமுன் பரப்பி வைக்கச் செய்தார். ஆக்கான், வெள்ளி, மேலாடை, ...................... , அவனுக்கிருந்த அனைத்தையும் யோசுவா கைப்பற்றி அவர்களோடு எல்லா இஸ்ரயேல் மக்களையும் ஆக்கோர் பள்ளத்தாக்கிற்குக் கூட்டி வந்தார். யோசுவா "ஏன் நீ தொல்லை வருவித்தாய்? இன்றே ஆண்டவரும் தொல்லை வருவிப்பார்" என்றார். இஸ்ரயேல் மக்கள் ...................... எறிந்து அவனைக் கொன்றனர். அவன்மீது பெரும் கற்குவியலை எழுப்பினர். அது இன்றுவரை உள்ளது. ஆண்டவர் தன் கடுஞ்சினத்தைத் தணித்துக் கொண்டதால், அவ்விடம் "ஆக்கோர் பள்ளத்தாக்கு" என அழைக்கப்படுகிறது.

**விடைகள்:** **யூதா குலம், யூதா, வெள்ளியையும், கல்லால், தங்கக்கட்டி, முப்பத்தாறு, மூவாயிரம், சினம், அழிவுக்குரியவர்கள், எமோரியர்.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 128

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய ஆண்டு
   *(1750 - 1725 - 1796)*

2. இலங்கையில் தெங்கு ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம்
   (குருநாகலை - சிலாபம் - லுணுகலை)

3. சார்பியல் தத்துவத்தைக் கண்டறிந்தவர்
   (ஐசக் நியூட்டன் - ஐன்ஸ்டின் - ஜோசப் பிரிட்ஸ்லி)

4. பாண்டிய மன்னர்களின் கொடியில் இருந்த சின்னம்
   (வில் - மீன் - வாள்)

5. 'பாடப்பாட இராகம் .........................,'
   (மூட மூட ரோகம் - ஓட ஓடத் தூரம் - தேடத் தேட சேரும்)

6. இந்தச் சொல்லின் பின் வல்லெழுத்து மிகாது
   (அத்தனை - அவனை - அவ்வகை)

பெயர் : ......................................................................................

முகவரி: ......................................................................................

......................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 128**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 126 விடைகள்

இரண்டாயிரம் அடி, கடந்து, யோர்தானை, எபூசியர், குவியலாக, யோசுவாவிடம், அடையாளமாக, பேழையை, எரிகோ, கில்காலில்.

## அறிவை வளர்ப்போம் - 126 விடைகள்

1. மயூரம் வேதநாயகம்பிள்ளை
2. தியாகராஜ சுவாமிகள்
3. நேபாளம்
4. ஆறில் ஒன்று
5. அகப்பையில் வரும்
6. வலித்தல் விகாரம்

### பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எவருமே எழுதாததால் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோருள் தெரிவான நால்வருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசுத் தொகை 200/=

- **A.** கிஷானி
  **59 A,** 2ம் ஒழுங்கை,
  மணற்சேனை,
  கல்முனை.
- கிரா விஜூன்
  செங்குந்தர் வீதி,
  ஆரையம்பதி - 02
- அ. ஜேம்ஸ் கைலேஸ்
  35/3, பெரிய உப்போடை வீதி,
  மட்டக்களப்பு.
- I. மேரி புளோரன்ஸ்
  140C ஆலய வீதி,
  சொறிக்கல்முனை - 01,
  சம்மாந்துறை.

### சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 76 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  R. தர்மிதா,
  இல. 614, கோரியடி வீதி,
  முகத்துவாரம்,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  எஸ். தேவதர்சனா,
  பிரதான வீதி,
  பெரிய கல்லாறு - 02,
  கல்லாறு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  லோ. ஜொனத்தன்,
  இல. 145/22, குவாரி வீதி,
  கிருலப்பனை,
  கொழும்பு - 06.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மனித உரிமைகள் ஆண்டை முன்னிட்டு
## மட்.மறைமாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்தும்

# குறுந்திரைப்படப் போட்டி




- போட்டியாளர்கள் பாடசாலை ரீதியாகவும் (அதிபரின் உறுதிப்படுத்தலுடன்), பங்கு ரீதியாகவும் (பங்குத் தந்தையின் உறுதிப்படுத்தலுடன்) போட்டியில் கலந்து கொள்ளலாம்.

- மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு படத்தின் கருப்பொருளாக இருக்கவேண்டும்.

- படத்தின் கால அளவு 10.00 நிமிடங்களுக்கு மேற்படாது இருத்தல் அவசியம்.

- குறும்படத்தின் C.D. பிரதி கிடைக்கவேண்டிய இறுதிநாள் 30 ஜூன் 2014.

- நடுவர்களால் தெரிவுசெய்யப்படும் மூன்று படங்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும் உலகத் தொடர்பு தின விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

இயக்குனர்,
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

1ம் பரிசு – 7000/=
2ம் பரிசு – 5000/=
3ம் பரிசு – 3000/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org